தமிழகம் முழுவதும் பின்கோடு வாரியாக
நிருபர்கள் தேவை (Freelancer)
நமது ஆனந்த பாஸ்கர், பேப்பர்பாய் மற்றும் தமிழ்நாடுஇபேப்பர் நாளிதழ்களுக்கு பணியாற்ற தொண்டுள்ளம் கொண்ட தன்னார்வளர்கள் (freelancer) அடிப்படையில் நிருபர்களாக பணியாற்ற, மக்கள் தொடர்பு அதிகம் உள்ள பத்திரிக்கை துறையில் ஆர்வம் உள்ளவர்கள், தமிழகம் முழுவதும் பின்கோடு வாரியாக நிருபர்கள் தேவை.
www.vaniks.com
No Monthly Commitments
9337501889, 7789941009

PRGI No. TNBIL/25/A1569

வைகறையில்
# பேப்பர்பாய்
www.paperboy.biz
VAIGARAIYIL PAPERBOY




சென்னை மலர்: 01 இதழ்: 188 19.02.2026 வியாழக்கிழமை

Chennai | Volume: 01 | Issue: 188 | Thursday | pages 8 | Rs.5/-

DISTRIBUTED ACROSS TAMILNADU AND PUDUCHERRY

## இன்றைய நாள்

வியாழக்கிழமை
(19–02–2026)
விசுவாவசு ஆண்டு, மாசி–7
பிறை: வளர்பிறை
திதி
துவிதியை மாலை 5.12 வரை
பிறகு திருதியை
நட்சத்திரம்:
பூரட்டாதி இரவு 10.03 வரை
பிறகு உத்திரட்டாதி
யோகம்
சித்தயோகம்
ராகுகாலம்
நண்பகல் 1.30–3.00 மணி
எமகண்டம்
காலை 6.00–7.30 மணி.
சூலம் – தெற்கு
நல்ல நேரம் :
காலை 9–10 மணி.
மாலை 4 –5 மணி

மேஷம் .................... நலம்
ரிஷபம்...................வெற்றி
மிதுனம் ....................சுபம்
கடகம் .................... சுகம்
சிம்மம் ................ அமைதி
கன்னி .................. இன்பம்
துலாம் ................மகிழ்ச்சி
விருச்சிகம்............ ஜெயம்
தனுசு ....................உயர்வு
மகரம் ................. நன்மை
கும்பம்.................... புகழ்
மீனம் ....................சாந்தம்

# மோடி, மேக்ரான் முன்னிலையில் இந்தியா - பிரான்ஸ் 21 ஒப்பந்தங்கள் கையெழுத்து

**மும்பை,பிப்.19:**

: பிரதமர் நரேந்திர மோடி, பிரான்ஸ் அதிபர் இமானுவேல் மேக்ரான் முன்னிலையில், இரு நாடுகள் இடையே 21 ஒப்பந்தங்கள் கையெழுத்தாயின.

தலைநகர் டெல்லியில் செயற்கை நுண்ணறிவு உச்சி மாநாடு நடைபெறுகிறது. இதில் பங்கேற்க பிரான்ஸ் அதிபர் இமானுவேல் மேக்ரான், அவரது மனைவி பிரிஜிட் மேக்ரான் நேற்று முன்தினம் இரவு 11.50 மணிக்கு மும்பை வந்தடைந்தனர். அவர்களை விமான நிலையத்தில் மகாராஷ்டிர ஆளுநர் ஆச்சார்ய தேவ்விரத், முதல்வர் தேவேந்திர பட்னாவிஸ் ஆகியோர் வரவேற்றனர். மும்பையில் உள்ள தாஜ் ஓட்டலில் அதிபர் மேக்ரான் தங்கினார்.

பிரான்ஸ் அதிபரை சந்திக்க பிரதமர் நரேந்திர மோடி நேற்று டெல்லியில் இருந்து மும்பைக்கு சென்றார். மும்பையில் உள்ள ஆளுநர் மாளிகையில் பிரதமர் மோடியும் பிரான்ஸ் அதிபர் இமானுவேல் மேக்ரானும் சந்தித்துப் பேசினர். அப்போது பாதுகாப்பு, வர்த்தகம், சுகாதாரம், தொழில்நுட்ப ஒத்துழைப்பு தொடர்பாக இரு நாடுகள் இடையே 21 ஒப்பந்தங்கள் கையெழுத் தாயின.



இந்தியா - பிரான்ஸ் இடையிலான உறவை, “சிறப்பு சர்வதேச ராஜ்ஜிய கூட்டுறவு” என்ற நிலைக்கு உயர்த்துவது, இந்தியா - பிரான்ஸ் புதுமை கண்டுபிடிப்பு ஆண்டு (2026), இந்தியா - பிரான்ஸ் புதுமை கண்டுபிடிப்பு கூட்டமைப்பு, உட்பட 21 ஒப்பந்தங்கள் கையெழுத்தாயின. இந்தியாவின் டாடா நிறுவனமும் பிரான்ஸின் ஏர்பஸ் நிறுவனமும் இணைந்து கர்நாடகாவின் வேமகள் பகுதியில் ஹெலிகாப்டர் உற்பத்தி ஆலையை அமைத்துள்ளன. இந்த ஆலையில் முதல்முறையாக எச்125 ரக ஹெலிகாப்டர் தயாரிக்கப்பட்டுள்ளது. பிரதமர் மோடியும் அதிபர் மேக்ரானும் இணைந்து காணொலி வாயிலாக இந்த ஹெலிகாப்டரை அறிமுகம் செய்தனர்.

பின்னர் பிரதமர் நரேந்திர மோடி கூறியதாவது: எனது அழைப்பை ஏற்று டெல்லி ஏஐ உச்சி மாநாட்டில் பங்கேற்க பிரான்ஸ் அதிபர் மேக்ரான் இந்தியாவுக்கு வருகை தந்துள்ளார். இந்தியாவின் நுழைவு வாயில் என்று அழைக்கப்படும் மும்பையில் அவரை வரவேற்பதில் பெருமிதம் அடைகிறேன். இந்த ஆண்டு இந்தியா - பிரான்ஸ் புதுமை கண்டுபிடிப்பு ஆண்டாக கொண்டாடப்படுகிறது.

> **இந்தியாவின் நுழைவு வாயில் என்று அழைக்கப்படும் மும்பையில் அவரை வரவேற்பதில் பெருமிதம் அடைகிறேன். இந்த ஆண்டு இந்தியா - பிரான்ஸ் புதுமை கண்டுபிடிப்பு ஆண்டாக கொண்டாடப்படுகிறது.** ”

இதன்படி பாதுகாப்பு, பசுமை எரிசக்தி, விண்வெளி உட்பட பல்வேறு துறைகளில் இரு நாடுகளும் இணைந்து செயல்பட உள்ளன. இரு தரப்பும் இணைந்து பல்வேறு ஆராய்ச்சி மையங்களை தொடங்க உள்ளன.

இந்திய - பிரான்ஸ் உறவுக்கு எல்லையே கிடையாது. இரு நாடுகள் இடை யிலான நட்புறவு கடலைவிட ஆழமானது. மலையைவிட உயரமானது. இவ்வாறு பிரதமர் நரேந்திர மோடி பேசினார்.

அதிபர் இமானுவேல் மேக்ரான் கூறியதாவது: இந்தியா - பிரான்ஸ் இடையிலான உறவு தனித் துவமானது. இந்த உறவை புதிய உச்சத்துக்கு கொண்டு செல்ல முடிவு செய்திருக்கிறோம். இந்திய, பசிபிக் பிராந்திய பாதுகாப்பு, இந்திய - மத்திய கிழக்கு - ஐரோப்பா பொருளாதார வழித்தடம் மற்றும் தொழில்நுட்பப் பரிமாற்றங் களில் இரு நாடுகளும் இணைந்து செயல்படுகின்றன.

பாதுகாப்புத் துறையில் இரு நாடுகள் இடையிலான உறவு வலுவடைந்து வருகிறது. ரஃபேல் போர் விமானங்கள் முதல் நீர்மூழ்கிகள் வரை இரு நாடுகள் இடையிலான உறவு விரிவடைந்து கொண்டே செல்கிறது. இந்தியா மீது நாங்கள் மிகுந்த நம்பிக்கை வைத்துள்ளோம். இதன் காரணமாக எங்களது தொழில் நுட்பங்களை இந்தியாவுடன் பகிர்ந்து வருகிறோம்.இவ்வாறு அதிபர் மேக்ரான் தெரிவித்தார்.

**ரஃபேல் போர் விமான ஒப்பந்தம் எப்போது?**

பிரான்ஸிடம் இருந்து ரூ.3.25 லட்சம் கோடியில் 114 ரஃபேல் போர் விமானங்களை வாங்க மத்திய அரசு முடிவு செய்துள்ளது. தற்போது இந்திய விமானப் படையில் ரஃபேல் எப்3 ரக போர் விமானங்கள் பயன்பாட்டில் உள்ளன. இவை 4.5-ம் தலைமுறை போர் விமானங்களாகும். புதிதாக பிரான்ஸிடம் இருந்து ரஃபேல் எப்4 ரக போர் விமானங்கள் வாங்கப்பட உள்ளன. இவை 5-ம் தலைமுறை போர் விமானங்களாகும்.

புதிதாக வாங்கும் 114 ரஃபேல் போர் விமானங்களில் 24 போர் விமானங்கள் சூப்பர் ரஃபேல் ரகத்தைச் சேர்ந்தவை. பிரதமர் மோடி, அதிபர் மேக்ரான் பேச்சுவார்த்தையின் போது ரஃபேல் போர் விமானங்கள் குறித்து இறுதி முடிவு எடுக்கப்பட்டதாகவும், இரு நாடுகள் இடையே விரைவில் ஒப்பந்தம் கையெழுத்தாகும் என்றும் தகவல்கள் வெளியாகி உள்ளன.

## அடுத்த 24 மணி நேரத்தில் ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வு பகுதி

**சென்னை,பிப்.19:**



இந்தியப் பெருங்கடல் மற்றும் அதனை ஒட்டிய தென்மேற்கு வங்கக்கடல் பகுதிகளில் குறைந்த காற்றழுத்த தாழ்வு பகுதி நிலவுகிறது. இது மேற்கு-வடமேற்கு திசையில் நகர்ந்து தென்மேற்கு வங்கக்கடல் மற்றும் அதனை ஒட்டிய இந்தியப் பெருங்கடல் பகுதிகளில் அடுத்த 24 மணி நேரத்தில் ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வு பகுதியாக வலுப்பெறக்கூடும் என்று இந்திய வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

முன்னதாக சென்னை வானிலை மையம் வெளியிட்டிருந்த செய்திக்குறிப்பில், “நேற்று முன்தினம் (16-02-2026) பூமத்தியரேகைக்கு அருகிலுள்ள இந்தியப் பெருங்கடலின் கிழக்கு பகுதிகள் மற்றும் அதனை ஒட்டிய தெற்கு வங்கக்கடலின் மையப்பகுதிகளில் நிலவிய காற்றழுத்த தாழ்வு பகுதி, மேற்கு-வடமேற்கு திசையில் மெதுவாக நகர்ந்து நேற்று (17-02-2026) காலை 8.30 மணி அளவில் பூமத்தியரேகைக்கு அருகிலுள்ள இந்தியப் பெருங்கடல் மற்றும் அதனை ஒட்டிய தென்மேற்கு வங்கக்கடல் பகுதிகளில் நிலவியது. இது மேலும் மேற்கு-வடமேற்கு திசையில் நகர்ந்து தென்மேற்கு வங்கக்கடல் மற்றும் அதனை ஒட்டிய பூமத்தியரேகைக்கு அருகிலுள்ள இந்தியப் பெருங்கடல் பகுதிகளில் (18-02-2026) வலுப்பெறக்கூடும் என்று தெரிவித்திருந்தது.

# மாநிலத்தில் சுயாட்சி; மத்தியில் கூட்டாட்சி! முதல்வர் ஸ்டாலின்

**சென்னை,பிப்.19:**

இந்தியாவை முதிர்ச்சியடைந்த கூட்டாட்சி நாடாக மாற்றும் வகையில் அரசியலமைப்புச் சட்டத்தில் திருத்தம் கொண்டு வரவேண்டும் என்று தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.



தமிழ்நாடு சட்டப்பேரவைக் கூட்டத்தொடரில், மத்திய - மாநில அரசுகளின் உறவுகள் குறித்த ஆராய அமைக்கப்பட்ட ஓய்வுபெற்ற நீதிபதி குரியன் ஜோசப் தலைமையிலான உயர்நிலைக் குழு அறிக்கையில் முதல் பகுதியை முதல்வர் ஸ்டாலின் இன்று வெளியிட்டார்.

இந்த அறிக்கையின் நகலை சட்டப்பேரவை உறுப்பினர்களுக்கு வழங்கி, முதல்வர் பேசியதாவது:

”முன்னாள் முதல்வர் அண்ணா, தனது இறுதி உயிர் போல எழுதியது தான் மாநில சுயாட்சி கொள்கை. அவரது மறைவுக்குப் பிறகு மாநிலத்தில் சுயாட்சி, மத்தியில் கூட்டாட்சி என்பதை ஐம்பெரும் முழக்கங்களில் ஒன்றாக கருணாநிதி வடிவமைத்து தந்தார்.

திராவிட ஆட்சியானது தமிழகத்துக்கு மட்டுமல்ல, இந்தியாவுக்கு வழிகாட்டும் மாபெரும் முன்னெடுக்கும் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த நாள்.

மத்திய - மாநில அரசுகளின் உறவுகள் குறித்த உயர்நிலைக் குழுவின் அறிக்கையின் முதல் பகுதியை சட்டப்பேரவையில் வைக்க இருக்கிறோம்.

ஒரு மாநிலமாக மக்கள் காணும் கனவை முழுமையாக நிறைவேற்ற நம்மிடம் அதிகாரம் இல்லை. ஏனெனில், மாநில உரிமைகளை வழங்கும் மத்திய அரசு அமையவில்லை. இருக்கின்ற அதிகாரத்தை வைத்துக் கொண்டுதான் கல்வி, சுகாதாரம், பொருளாதாரம், உள்கட்டமைப்பில் முன்னேறி வருகிறோம். நில உரிமை, நிதி உரிமை உள்ளிட்ட கோரிக்கைக்கு இன்னும் கடுமையாக போராடும் சூழல்தான் உள்ளது.

எல்லா அதிகாரங்களையும் கொண்டவையாக மாநில அரசுகளை மாற்றும் வகையில் அரசியலமைப்பில் திருத்தம் கொண்டு வருவதற்கான சட்ட முன்னெடுப்புகளை தொடங்கக் கூடிய நாள் இன்று.

அனைத்து அதிகாரங்களையும் தன்வசம் வைத்துள்ள மத்திய அரசு, மாநில அரசுகளை மதிப்பதில்லை. இன்னும் எத்தனை நாள்கள்தான் அவர்கள் கொடுக்கும் இடத்திலும், நாம் வாங்கும் இடத்திலும் இருக்க வேண்டும். இதற்கு தீர்வு காணும் வகையில் மத்திய - மாநில அரசுகளின் உறவுகள் குறித்த உயர்நிலைக் குழுவின் அறிக்கை. சுருக்கமாக சொல்ல வேண்டுமென்றால் பூனைக்கு மணி கட்டியுள்ளோம்.

அனைத்து மாநிலங்களும் சுயாட்சி பெற்றவையாக இருக்க வேண்டும். அனைத்து மாநிலங்களும் இணைந்து நடத்தும் கூட்டாட்சி அரசாக மத்திய அரசு செயல்பட வேண்டும் என்பதுதான் நமது கொள்கை. மற்ற மாநில அரசுகளின் உள்ளத்திலும் இதுதான் இருக்கின்றன.

மாநில சுயாட்சி கொள்கையை அரசியல் எல்லைகளைக் கடந்து அனைவரும் ஏற்றுக் கொள்ள வேண்டும்.

மத்திய - மாநில அரசுகளின் உறவுகள் குறித்து ஆராய உச்ச நீதிமன்ற முன்னாள் நீதிபதி குரியன் ஜோசப் தலைமையிலான உயர்நிலைக் குழுவை தமிழக அரசு நியமித்தது. அந்தக் குழு தனது அறிக்கையை கடந்த 16ஆம் தேதி வழங்கியுள்ளது.

மாநில சுயாட்சி வேண்டும், மத்தியில் கூட்டாட்சி மலர வேண்டும். இது தனிப்பட்ட அரசியல் கட்சியின் கோரிக்கை அல்ல, இந்திய மக்களின் வாழ்வியல் கோரிக்கை. பன்முகத்தன்மை கொண்ட இந்தியாவுக்கு கூட்டாட்சி தான் அடிப்படை. எனவே, இத்தகைய தன்மை கொண்டதாக இந்திய அரசியலமைப்புச் சட்டத்தை மாற்ற வேண்டும்.

கடந்த 76 ஆண்டுகளில் 106 முறை இந்திய அரசியலமைப்புச் சட்டம் திருத்தப்பட்டுள்ளது. நாம் முயன்றால் மீண்டும் திருத்த முடியும். இந்தியாவை முதிர்ச்சியடைந்த கூட்டாட்சி நாடாக மாற்றும் முயற்சியைத் தொடங்க வேண்டும். அதிகாரமும் வாய்ப்புகளும் ஒரே இடத்தில் குவிந்திருக்கக் கூடாது, பரவலாக வேண்டும்.

கூட்டாட்சி கொண்டதாக இந்திய அரசியலமைப்பை மாற்றுவது மத்திய அரசை பலவீனப்படுத்தாது என்று அறிக்கை கூறுகிறது. ஆளுநர்கள் மூலமாக மாநில அரசுகளை செயல்படவிடாமல் தடுப்பது, ஜி.எஸ்.டி., ஹிந்தி திணிப்பு, கல்வி நிதி அனைத்துக்கும் ஒரே மருந்து மாநில சுயாட்சிதான்.

நாடாளுமன்றத்தில் மாநிலங்களவையிலும், மக்களவையிலும், இந்த கொள்கைக்கு ஆதரவு தெரிவிக்கும் ஜனநாயக சக்திகள் அதிகமாக இருக்கிறார்கள். எண்ணிக்கையாலும், எண்ணங்களாலும் அதிகமாக இருக்கிறார்கள். நாடு முழுவதும் உள்ள அனைத்து அரசியல் கட்சிகளுக்கும் இந்த அறிக்கை அனுப்பி வைக்கப்படும். மத்திய அரசும் மாநில அரசும் போட்டியாளர்கள் அல்ல. இருவரும் பொது அமைப்பின் பங்குதாரர்கள். மாநிலங்கள் வளர்ந்தால்தான் மத்திய அரசு வளரும்” எனத் தெரிவித்தார்.

# மாநிலங்களவை தேர்தல் தேதி அறிவிப்பு! காலியாகும் 6 இடங்கள்!!

**புது டில்லி,பிப்.19:**

மாநிலங்களவைத் தேர்தலுக்கான தேதியை இந்தியத் தலைமைத் தேர்தல் ஆணையம் புதன்கிழமை வெளியிட்டுள்ளது.

நாட்டில் தமிழகம், மேற்கு வங்கம் உள்பட 10 மாநிலங்களில் 37 இடங்களுக்கான மாநிலங்களவைத் தேர்தல் வருகிற மார்ச் 16 ஆம் தேதி நடைபெறும் இந்தியத் தலைமைத் தேர்தல் ஆணையம் அறிவித்துள்ளது.

தமிழகத்தில் 6 இடங்கள் காலியாகின்றன.

தமிழ்நாடு, மகாராஷ்டிரா, ஒடிசா, மேற்கு வங்கம், அஸ்ஸாம், பிகார், சத்தீஷ்கர், ஹரியாணா, ஹிமாசலப் பிரதேசம், தெலகானா உள்ளிட்ட இடங்களில் மொத்தமாக 37 இடங்கள் காலியாகின்றன. இதில், 17 எம்பிக்கள் பதவிக்காலம் ஏப்ரல் 2 ஆம் தேதியும், மீதமுள்ள 20 எம்பிக்களின் பதவிக்காலம் ஏப்ரல் 4 ஆம் தேதியும் நிறைவடைகிறது.

தமிழ்நாட்டில் உள்ள மாநிலங்களவை எம்பிக்கள் என். ஆர். இளங்கோ, கனிமொழி சோமு, திருச்சி சிவா, தம்பிதுரை, ஜி.கே. வாசன், பி. செல்வராசு உள்ளிட்டோரின் பதவிக்காலம் ஏப்ரலில் நிறைவடையவுள்ளது.

மகாராஷ்டிரத்தில் டாக்டர் பகவத் கிஷன்ராவ் கான், டாக்டர் பௌசியா தஹ்சீன் அகமது சதுர்வேதி, பிரியங்கா விக்ரம் பவார், சரத்சந்திர கோவிந்தராவ் பாட்டீல், தைரியஷில் மோகன் பாட்டீல், ரஜனி சோக்ராவ் அத்வாலே, ஒடிசாவில் மம்தா மோகந்தா, முசிபுல்லா கான், சுஜீத் குமார், நிரஞ்சன் பிஷி, மேற்கு வங்கத்தில் சகேத் கோகலே, ரிதாப்ரதா பானர்ஜி, விகாஷ் ரஞ்சன் பட்டாச்சார்யா, மௌசம் நூர், சுப்ரதா பாஷி, அஸ்ஸாமில் ராமேஷ்வர் தெலி, புவனேஷ்வர் காலிதா, அஜித்குமார் பூயான், பிகாரில் அமரேந்திர தாரி சிங், பிரேம் சந்த் குப்தா, ராம்நாத் தாக்குர், உபேந்தர குஷ்வாகா, ஹரிபன்ஷ் நாராயண் சிங், சத்தீஷ்கரில் கவி தேஜ்பால் சிங் துளதி, பூலோ தேவி நேதம், ஹரியாணாவில் கிர்ண் சௌதரி, ராம் சந்தர் ஜங்காரா, ஹிமாசலப் பிரேதசத்தில் இந்து பாலா கோஸ்வாமி, தெலங்கானாவில் டாக்டர் அபிஷேக் மனு சிங்கவி, சுரேஷ் ரெட்டி உள்ளிட்டோரின் பதவிக்காலம் நிறைவடையவுள்ளது.

மாநிலங்களவைத் தேர்தலுக்கான அறிவிப்புகள் வருகிற பிப். 26 ஆம் தேதி வெளியாகிறது. அதைத் தொடர்ந்து மார்ச் 5 ஆம் தேதி வேட்புமனுக்கள் தாக்கலுக்கான கடைசி நாளாகும். மார்ச் 6 ஆம் தேதி வேட்பு மனுக்கள் மீதான பரிசீலனை நடைபெறுகிறது. வேட்பு மனுவைத் திரும்ப பெற மார்ச் 9 ஆம் தேதி கடைசி நாள்.

மாநிலங்களவைத் தேர்தலுக்கான வாக்குப்பதிவு மார்ச் 16 ஆம் தேதி காலை 9 மணி முதல் மாலை 4 மணி வரை நடைபெறவுள்ளது. அதைத் தொடர்ந்து அன்று மாலையே வாக்கு எண்ணிக்கையும் நடைபெறவுள்ளது.

சட்டப்பேரவை உறுப்பினர்களின் எண்ணிக்கை அடிப்படையில் தமிழ்நாட்டில் திமுக சார்பில் 4 எம். பிக்களையும், அதிமுக சார்பில் 2 எம்.பிக்களையும் தேர்வு செய்ய முடியும்.

# இந்தியா கூட்டணிக்கு மு.க.ஸ்டாலினை தலைவராக்க வேண்டும்

## உத்தவ் சிவசேனா கட்சி வலியுறுத்தல்



**புதுடெல்லி, பிப்.19:**

இந்தியா கூட்டணியின் தலைவராக தகுதியுள்ள நபர் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின்தான் என்று காங்கிரஸ் மூத்த தலைவர் மணிசங்கர் அய்யர் கூறியிருந்த நிலையில், உத்தவ் சிவசேனா கட்சியும் இதே கருத்தை தெரிவித்துள்ளது.

இந்தியா கூட்டணிக்கு தேசிய அளவில் மு.க.ஸ்டாலின் அல்லது மம்தா பானர்ஜியை தலைவராக்க வேண்டும் என்று உத்தவ் சிவசேனா கட்சியின் 'சாம்னா' நாளிதழ் தலையங்கம் எழுதியுள்ளது.

அந்த தலையங்கத்தில், "இந்தியா கூட்டணிக் கட்சிகளுக்குள் வெவ்வேறு மாநிலங்களில் நிலவும் முரண்பாடுகளை களைந்து, ஒற்றுமையாக ஒரு தலைவருக்குக் கீழ் பணியாற்ற வேண்டும். அந்த தலைவர் ஸ்டாலினா, மம்தாவா அல்லது வேறு ஒருவரா என்பதை சீக்கிரம் முடிவு செய்வது அவசியம்" என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

# பழனி கோவிலில் நேற்று முன் அறிவிப்பின்றி ரோப்கார் நிறுத்தம்



**பழனி, பிப்.19:**

அறுபடை வீடுகளில் 3ம் படை வீடான பழனி முருகன் கோவிலில் பக்தர்கள் வசதிக்காக ரோப் கார் சேவை மற்றும் மின் இழுவை ரெயில் இயக்கப்பட்டு வருகிறது.

இதில் பெரும்பாலான பக்தர்கள் ரோப் காரில் பயணம் செய்வதையே விரும்புகின்றனர். விரைவாக செல்லவும், இயற்கை அழகை ரசித்தபடி செல்லவும் ரோப் காரில் பயணம் மேற்கொள்கின்றனர்.

இந்நிலையில் ரோப் கார் பராமரிப்பு பணிக்காக தினமும் ஒரு மணி நேரமும், மாதத்துக்கு ஒரு நாளும், வருடத்திற்கு ஒரு மாதமும் நிறுத்தப்படுவது வழக்கம். இந்நிலையில் இன்று காலை ரோப்கார் சேவை வழக்கம் போல் இயக்கப்படும் என பக்தர்கள் வரிசையில் காத்திருந்தனர். ஆனால் திடீரென மின்னணு பழுது ஏற்பட்டதால் ரோப் கார் இன்று காலை இயக்கப்படவில்லை. இதனால் ரோப் கார் ஊழியர்கள் தொடர்ந்து பராமரிப்பு பணியில் ஈடுபட்டு வந்தனர்.

நீண்ட நேரம் காத்திருந்தும் ரோப்கார் இயக்க முடியாததால் பக்தர்கள் படிப்பாதை மற்றும் மின் இழுவை ரெயில் மூலமாக மலைக்கோவில் சென்று முருகனை தரிசனம் செய்யுமாறு கோவில் நிர்வாகம் சார்பில் அறிவிக்கப்பட்டது. முன்னறிவிப்பு இன்றி திடீரென ரோப்கார் நிறுத்தப்பட்டதால் பக்தர்கள் மிகுந்த சிரமத்துக்கு ஆளாகினர்.

# விவேக் எக்ஸ்பிரசில் கடத்தப்பட்ட 33 கிலோ கஞ்சா பறிமுதல்



**திருவனந்தபுரம், பிப்.19:**

அசாம் மாநிலம் திப்ருகரில் இருந்து கன்னியாகுமரிக்கு இயக்கப்படும் வாராந்திர ரெயில் திப்ருகர் எக்ஸ்பிரஸ். இந்தியாவின் மிகவும் நீளமான ரெயில் பாதையை கொண்ட இந்த எக்ஸ்பிரஸ், 4,189 கிலோமீட்டர் தூரத்தை 74 மணி நேரத்தில் கடக்கிறது.

விவேகானந்தரின் 150-வது பிறந்தநாளை நினைவுகூரும் வகையில் 2013-ம் ஆண்டு இந்த ரெயில் சேவை தொடங்கப்பட்டது. கன்னியாகுமரியில் இருந்து திங்கள், புதன், வியாழன், சனி என வாரத்தில் 4 நாட்கள் இயக்கப்படுகிறது.

அசாம், நாகாலாந்து, மேற்கு வங்காளம், பீகார், ஜார்க்கண்ட், ஒடிசா, ஆந்திரா, கேரளா மற்றும் தமிழ்நாடு ஆகிய 9 மாநிலங்களின் வழியாக இயக்கப்படும் விவேக் எக்ஸ்பிரசில், சமீபகாலமாக அதிகளவில் கஞ்சா கடத்தி கொண்டுவரப்படுகிறது.

அவ்வாறு கடத்தி வரப்பட்ட கிலோ கணக்கிலான கஞ்சாவை, குமரி மாவட்ட ரெயில்வே போலீசார் பிடித்துள்ளனர். இந்தநிலையில் விவேக் எக்ஸ்பிரசில் கடத்தி கொண்டுவரப்பட்ட 33 கிலோ கஞ்சா பறிமுதல் செய்யப்பட்டுள்ளது.

திப்ருகரில் இருந்து கன்னியாகுமரி வந்த அந்த ரெயில், ஆலுவா ரெயில் நிலையத்திற்கு வந்தபோது கலால் மற்றும் ரெயில்வே பாதுகாப்பு படை போலீசார் இணைந்து அதிரடி சோதனை நடத்தினர்.

அப்போது அந்த ரெயிலின் பின்பகுதியில் இருந்த பொதுப்பெட்டியில் கழிவறைக்கு அருகே சந்தேகமளிக்கும் வகையில் சில பைகள் கிடந்தன. அவற்றை அவர்கள் சோதனை செய்தபோது, அதில் கஞ்சா இருந்தது கண்டுபிடிக்கப்பட்டது.


மொத்தம் 33 கிலோ கஞ்சா இருந்தது. அதனை போலீசாரும், கலால் துறையினரும் பறிமுதல் செய்தனர். கஞ்சாவை கடத்தி வந்த நபர்களை ரெயிலில் போலீசார் தேடிப்பார்த்தனர். ஆனால் அவர்கள் சிக்கவில்லை. பறிமுதல் செய்யப்பட்ட கஞ்சாவின் மதிப்பு பல லட்சம் ரூபாய் ஆகும்.

ஆலுவா ரெயில் நிலையத்தில் கடந்த 13-ந்தேதி 10 கிலோ கஞ்சாவும், ஆலுவா சந்தையில் ரூ.17லட்சம் மதிப்புள்ள கஞ்சாவும், திருச்சூர் ரெயில் நிலையத்தில் நேற்று (17-ந்தேதி) 5 கிலோ கஞ்சாவும் பிடிபட்டது. சட்டமன்ற தேர்தல் நெருங்கி வருவதால் வெளி மாநிலங்களில் இருந்து கேரளாவுக்கு கஞ்சா கடத்தல் அதிகரித்திருப்பதாக குற்ற புலனாய்வுபிரிவு இன்ஸ்பெக்டர் ஜிபின் தெரிவித்துள்ளார்.

# வெல்லும் தமிழ்ப் பெண்கள் - பிப்.23 முதல் வீடு வீடாக பிரசாரம்: முதலமைச்சர் அறிவிப்பு

**சென்னை, பிப்.19:**

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தி.மு.க. மாவட்டச் செயலாளர்களுக்கு வெளியிட்டுள்ள அறிக்கையில்,



திராவிட மாடல் அரசு அமைந்த பிறகு பெண்களுக்கான 'கலைஞர் மகளிர் உரிமைத் திட்டம்' - 'விடியல் பயணம்' - 'தோழி விடுதிகள்' - 'புதுமை பெண் திட்டம்' உள்ளிட்ட பல்வேறு நலத்திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு, மகளிருக்கான ஆட்சியென நடைபெற்று வருகிறது. நமது சாதனைத் திட்டங்களால் பெண்கள் - வெல்லும் தமிழ்ப் பெண்களாக உயர்ந்துள்ளனர். பெண்கள் பயனாளிகள் மட்டுமல்ல, மாநில வளர்ச்சியின் பங்குதாரர்கள் என்ற சீரிய சிந்தனையுடன் செயலாற்றும் 'திராவிட மாடல் அரசு' நிறைவேற்றியுள்ள நலத் திட்டங்களையும் - 'பெண்களின் முன்னேற்றமே தமிழ்ச் சமூகத்தின் முன்னேற்றம்' எனும் கொள்கை உறுதியுடன் பெண்களுக்கான எண்ணற்ற பல திட்டங்களையும் - சாதனைகளையும் ஒவ்வொரு வீட்டிலும் உள்ள மகளிரிடம் எடுத்து சென்று சேர்ப்பதே இப்பரப்புரையின் நோக்கமாக இருக்க வேண்டும்.

இப்பரப்புரையை, வீடு வீடாகச் சென்று மேற்கொள்ளும் விதமாக தி.மு.கழகத்தின் சார்பில் ஒவ்வொருவாக்குச்சாவடியிலும் மாவட்டச் செயலாளர்களால் வழங்கப்பட்டுள்ள பட்டியலின் அடிப்படையில், 10 மகளிரை கொண்ட குழு உருவாக்கப்பட்டுள்ளது. அக்குழுவின் சார்பில் ஒரு உறுப்பினர் வீதம் தேர்வு செய்யப்பட்டு தொகுதி அளவிலான பயிற்சிக் கூட்டங்களை நடத்திட வேண்டும். "வெல்லும் தமிழ்ப் பெண்கள்"பரப்புரைக்கான சட்டமன்றத் தொகுதி வாரியான பயிற்சிக் கூட்டத்தை வரும் பிப்ரவரி 20, 21 மற்றும் 22-ஆம் தேதிகளுக்குள் அனைத்து தொகுதிகளிலும் நடத்தி முடித்திட வேண்டும்.

இப்பயிற்சியை, சட்டமன்றத் தொகுதி மகளிர் அணி பொறுப்பாளர்கள் வழங்குவர். பயிற்சிக் கூட்டத்தில் வெல்லும் தமிழ்ப் பெண்கள் பரப்புரை பற்றிய முழு பயிற்சியும் வாக்குச்சாவடி அளவிலான மகளிர் குழு பொறுப்பாளர்களுக்கு அளிக்கப்படும்.

அதன் பிறகு அவர்கள் ஒவ்வொருவாக்குச்சாவடியிலும் உள்ள இதர உறுப்பினர்களுக்கு பயிற்சி அளித்து பரப்புரையைத் தொடங்கிட வேண்டும்.

வரும் பிப்ரவரி 23-ஆம் தேதி முதல் "வெல்லும் தமிழ்பெண்கள் - வீடு வீடாகப் பரப்புரை" தொடங்கி, உலக மகளிர் தினமான மார்ச்-8ஆம் தேதிக்குள் அனைத்து வீடுகளையும் சென்றடையும் வகையில் சிறப்பாக நடத்திட வேண்டும்.

கழகத்தின் வரலாற்றுச் சிறப்புமிக்க கழகத்தின் வெற்றியை உறுதி செய்து மீண்டும் தி.மு. கழகத்தை ஆட்சிக் கட்டிலில் அமர்த்திட புறப்பட்டுவிட்டது இந்த ஸ்டாலினின் மகளிர் படை என இப்பரப்புரை சிறப்பிட அமைந்திட வேண்டும்.

வெல்லும் தமிழ்ப் பெண்கள் பரப்புரைக்கான அனைத்து ஏற்பாடுகளையும் மண்டல பொறுப்பாளர்கள் - பொறுப்பு அமைச்சர்கள் - மாவட்டக் கழகச் செயலாளர்/பொறுப்பாளர்கள் செய்துதர வேண்டுமென கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# விபத்தில் மூளைச்சாவு அடைந்த புதுமாப்பிள்ளையின் உடல் உறுப்புகள் தானம்

**நாகர்கோவில், பிப்.19:**

நெல்லை மாவட்டம் ஆவரைகுளம் பகுதியை சேர்ந்தவர் மகேஷ்(வயது 23). கபடி வீரரான இவருக்கும், குமரி மாவட்டம் மருங்கூர் பகுதியை சேர்ந்த இளம்பெண் ஒருவரும் காதல் திருமணம் செய்து கொண்டனர். இவர்களது திருமணம் கடந்த 8 மாதங்களுக்கு முன்பு நடந்தது.



இந்தநிலையில் நேற்று முன்தினம் (16-ந்தேதி) மதியம் மகேஷ் காவல்கிணறு பாலத்தில் மோட்டார் சைக்கிளில் சென்றபோது விபத்தில் சிக்கி படுகாயம் அடைந்தார். இதையடுத்து அவர் சிகிச்சைக்காக ஆசாரிப்பள்ளம் அரசு ஆஸ்பத்திரியில் சேர்த்தனர். அப்போது அவர் மூளைச்சாவு அடைந்தார்.

இதையடுத்து அவரது உடல் உறுப்புகளை தானம் செய்ய குடும்பத்தினர் முடிவு செய்தனர். இதற்கு அவரது மனைவியும் சம்மதம் தெரிவித்தார். மகேசின் சிறுநீரகம், கண்கள், கல்லீரல் ஆகிய உறுப்புகளை தானம் பெற நடவடிக்கை எடுக்கப்பட்டது.

அதற்கான நடவடிக்கையில் ஆசாரிப்பள்ளம் அரசு ஆஸ்பத்திரி டாக்டர்கள் குழுவினர் ஈடுபட்டனர். இன்று காலையில் மகேசின் உடலில் இருந்து சிறுநீரகங்கள், கண்கள், கல்லீரல் ஆகியவை அறுவை சிகிச்சை மூலம் அகற்றப்பட்டன. அவற்றை 5 பேருக்கு பொருத்த நடவடிக்கை எடுக்கப்பட்டது.

இதற்காக தயார் நிலையில் இருந்த ஆம்புலன்சுகள் மூலமாக அவற்றை கொண்டு செல்ல நடவடிக்கைமேற்கொண்டனர். மகேசன் ஒரு சிறுநீரகம் திருச்சியில் உள்ள ஆஸ்பத்திரிக்கும், மற்றொரு சிறுநீரகம் காரைக்குடியில் உள்ள ஆஸ்பத்திரிக்கும் கொண்டு செல்லப்பட்டன. இதேபோல் கல்லீரலும் திருச்சியில் உள்ள ஆஸ்பத்திரிக்கு கொண்டு செல்லப்பட்டது. கண்கள் நாகர்கோவிலில் உள்ள மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

மகேசின் உடல் உறுப்புகளுடன் ஆம்புலன்சுகள் ஆசாரிப்பள்ளம் அரசு ஆஸ்பத்திரியில் இருந்து வெளியூர்களுக்கு கொண்டு செல்லப்பட்டதையடுத்து நாகர்கோவில் நகரில் போக்குவரத்தை சரி செய்ய போலீசார் நடவடிக்கை மேற்கொண்டனர்.

இதற்காக நகரின் முக்கிய சந்திப்புகளில் போக்குவரத்து போலீசார் நிறுத்தப்பட்டிருந்தனர். அவர்கள் ஆம்புலன்சுகள் வந்தபோது மற்ற வாகனங்களை நிறுத்தி வைத்திருந்தனர்.

இதனால் உடல் உறுப்புகளை கொண்டு சென்ற ஆம்புலன்சுகள், எந்தவொரு நெரிசலிலும் சிக்காமல் நாகர்கோவில் நகரை சில நிமிடங்களில் கடந்து சென்றது. பின்பு சிறிது நேரத்தில் மகேசின் உடல், அவர்களது உறவினரிடம் ஒப்படைக்கப்பட்டது. அவரது உடலை பார்த்து உறவினர்கள் கதறி அழுதனர்.

அவர்கள் கூறுகையில், "மகேஷ் விபத்தில் சிக்கி மூளைச்சாவு அடைந்தார். இதைத் தொடர்ந்து அவரது உடல் உறுப்புகளை தானம் செய்ய நாங்கள் முடிவு செய்தோம்.

அவரது உறுப்புகளை கொண்டு சிலர் உயிர் வாழ்வார்கள் என்ற நல்லெண்ணத்துடன் இந்த முடிவை எடுத்தோம். அதன் அடிப்படையில் அவரது கிட்னி, கல்லீரல், கண்கள் தானமாக வழங்கப்பட்டுள்ளது" என்று கண்ணீர் மல்க கூறினார்கள்.

# திருப்பத்தூர் மாவட்ட காவல் அலுவலகத்தில் வாராந்திர பொதுமக்கள் குறைதீர்வு கூட்டம்



திருப்பத்தூர் மாவட்ட காவல் அலுவலகத்தில் வாராந்திர பொதுமக்கள் குறைதீர்வு கூட்டம் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் V.சியாமளா தேவி., தலைமையில் நடைபெற்றது. இக்குறைதீர்வு கூட்டத்தில் பொதுமக்களிடம் மொத்தமாக 32 மனுக்கள் பெறப்பட்டன. மனுக்களை விசாரணை செய்து உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்று மாவட்ட காவல் கண்காணிப்பாளர் தெரிவித்தார்.

# உலக தாய்மொழி தினவிழா பேச்சுப் போட்டிகளில் வென்ற மாணவர்களுக்கு பரிசுகள்



**வந்தவாசி, பிப் 18:**

திருவண்ணாமலை மாவட்டம், வந்தவாசி அடுத்த தெள்ளார் ஒன்றியம், செட்டிக் குளம் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளியில் ஸ்ரீகிருஷ்ணா கல்வி மையம் சார்பில் உலக தாய்மொழி தின விழா கொண்டாடப்பட்டது. இந்த நிகழ்விற்கு பள்ளி தலைமை ஆசிரியர் தேவக்குமார் தலைமை தாங்கினார்.

ஸ்ரீகிருஷ்ணா கல்வி மைய முதல்வர் பா. சீனிவாசன், புலவர் ந.பானு ஆகியோர் முன்னிலை வகித்தனர். ஆசிரியை பரிதா பேகம் வரவேற்றார். சிறப்பு அழைப்பாளராக, புதுவை தமிழ்ச் சங்க தலைவர் கலைமாமணி முனைவர் வி.முத்து பங்கேற்று சிறப்புரை ஆற்றினார். தாய்மொழி கல்வியே வாழ்க்கையின் உயர்வுக்கு வழி வகுக்கும் என்று வலியுறுத்தினார். மேலும் இன்றைய சூழலில் குழந்தைகளுக்கு தமிழிலேயே பெயர் சூட்ட வேண்டும் என்றும் வலியுறுத்தப்பட்டது. இந்த நிகழ்வில் முன்னாள் தலைவர் அன்பு, முன்னாள் கவுன்சிலர் பாண்டுரங்கன், பள்ளி மேலாண்மை குழு தலைவர் ராஜேஸ்வரி, துணைத் தலைவர் தரணி, கணினி ஆசிரியர் சுரேஷ், இயக்குநர் அருள் முருகன் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினார்.

மேலும் தாய்மொழி தின சிறப்பு உரையரங்கில் சிறப்பிடம் பெற்ற மாணவர்களுக்கு புத்தக பரிசுகள் வழங்கப்பட்டது. இறுதியில் பட்டதாரி ஆசிரியர் பரந்தாமன் நன்றி கூறினார்.

# நான் காந்தி, நேரு, ராஜிவ் காந்தியை பின்பற்றுபவன்: ராகுல் காந்தியை அல்ல- மணி சங்கர் அய்யர்

**சென்னை, பிப்.19:**

காங்கிரஸ் கட்சியின் மூத்த தலைவர்களில் ஒருவரான மணி சங்கர் அய்யர், மற்ற காங்கிரஸ் கட்சி தலைவர்களை கடுமையான விமர்சனம் செய்து வருகிறார். சமீபத்தில் வேணுகோபால் ரவுடி எனக் கூறியிருந்தார். சசி தரூர் பாகிஸ்தானுக்கு எதிரானவர். இவர் வெளியுறவுத்துறை மந்திரி பதவியை விரும்புகிறார். கேரளாவில் பினராயி விஜயன் தலைமையில் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கூட்டணி மீண்டும் ஆட்சியை பிடிக்கும் என்று தெரிவித்திருந்தார்.

இந்த நிலையில் ராகுலியன் இல்லை என்று மணி சங்கர் அய்யர் தெரிவித்துள்ளார். இது தொடர்பாக மணி சங்கர் அய்யர் கூறியதாவது:-

நான் காந்தியன் (காந்தி கொள்கையை பின்பற்றுபவன்), நேருவியன். ராஜிவியன். ஆனால் ராகுலியன் அல்ல. ஏனென்றால் அவர் என்னைவிட மிகவும் இளமையானவர். எனது அரசியல் வாழ்க்கையில் என்னிடம் இருந்து மிகத் தொலைவில் இருக்கிறார்.

நான் இந்திராவியன் (இந்திராகாந்தி கொள்கைளை பின்பற்றுபவன்) என்று சொல்லமாட்டேன். ஏனென்றால் எமர்ஜென்சியை அறிவித்து ஜனநாயகத்தை கொடுங்கோன்மையாக இந்திராகாந்தி மாற்றிய நான் முற்றிலுமாக ஏற்கவில்லை.

ராகுல் காந்தி என்னை விட 30 வயது இளையவர். அவருடன் பணிபுரியும் வாய்ப்பு எனக்குக் கிடைக்காதபோது, நான் எப்படி 'ராகுலியன்' ஆவேன் என்று எதிர்பார்க்க முடியும்?

இவ்வாறு மணிசங்கர் அய்யர் தெரிவித்துள்ளார்.

# சட்டசபை தேர்தலை முன்னிட்டு தமிழக-கேரள எல்லை கலெக்டர்கள், போலீஸ் அதிகாரிகள் ஆலோசனை

**சென்னை, பிப்.19:**

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் தி.மு.க. மாவட்டச் செயலாளர்களுக்கு வெளியிட்டுள்ள அறிக்கையில்,




திராவிட மாடல் அரசு அமைந்த பிறகு பெண்களுக்கான 'கலைஞர் மகளிர் உரிமைத் திட்டம்' - 'விடியல் பயணம்' - 'தோழி விடுதிகள்' - 'புதுமை பெண் திட்டம்' உள்ளிட்ட பல்வேறு நலத்திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு, மகளிருக்கான ஆட்சியென நடைபெற்று வருகிறது. நமது சாதனைத் திட்டங்களால் பெண்கள் - வெல்லும் தமிழ்ப் பெண்களாக உயர்ந்துள்ளனர். பெண்கள் பயனாளிகள் மட்டுமல்ல, மாநில வளர்ச்சியின் பங்குதாரர்கள் என்ற சீரிய சிந்தனையுடன் செயலாற்றும் 'திராவிட மாடல் அரசு' நிறைவேற்றியுள்ள நலத் திட்டங்களையும் - 'பெண்களின் முன்னேற்றமே தமிழ்ச் சமூகத்தின் முன்னேற்றம்' எனும் கொள்கை உறுதியுடன் பெண்களுக்கான எண்ணற்ற பல திட்டங்களையும் - சாதனைகளையும் ஒவ்வொரு வீட்டிலும் உள்ள மகளிரிடம் எடுத்து சென்று சேர்ப்பதே இப்பரப்புரையின் நோக்கமாக இருக்க வேண்டும்.

இப்பரப்புரையை, வீடு வீடாகச் சென்று மேற்கொள்ளும் விதமாக தி.மு.கழகத்தின் சார்பில் ஒவ்வொருவாக்குச்சாவடியிலும் மாவட்டச் செயலாளர்களால் வழங்கப்பட்டுள்ள பட்டியலின் அடிப்படையில், 10 மகளிரை கொண்ட குழு உருவாக்கப்பட்டுள்ளது. அக்குழுவின் சார்பில் ஒரு உறுப்பினர் வீதம் தேர்வு செய்யப்பட்டு தொகுதி அளவிலான பயிற்சிக் கூட்டங்களை நடத்திட வேண்டும். "வெல்லும் தமிழ்ப் பெண்கள்"பரப்புரைக்கான சட்டமன்றத் தொகுதி வாரியான பயிற்சிக் கூட்டத்தை வரும் பிப்ரவரி 20, 21 மற்றும் 22-ஆம் தேதிகளுக்குள் அனைத்து தொகுதிகளிலும் நடத்தி முடித்திட வேண்டும்.

இப்பயிற்சியை, சட்டமன்றத் தொகுதி மகளிர் அணி பொறுப்பாளர்கள் வழங்குவர். பயிற்சிக் கூட்டத்தில் வெல்லும் தமிழ்ப் பெண்கள் பரப்புரை பற்றிய முழு பயிற்சியும் வாக்குச்சாவடி அளவிலான மகளிர் குழு பொறுப்பாளர்களுக்கு அளிக்கப்படும். அதன் பிறகு அவர்கள் ஒவ்வொரு வாக்குச்சாவடியிலும் உள்ள இதர உறுப்பினர்களுக்கு பயிற்சி அளித்து பரப்புரையைத் தொடங்கிட வேண்டும்.

தேர்தலை காரணமாக வைத்து, கலைஞர் மகளிர் உரிமைத்தொகை திட்டத்தையே முடக்குவதற்கான ஒன்றிய பா.ஜ.க. - அடிமை அ.தி.மு.க.வின் சூழ்ச்சிகளை முறியடித்து, " நீ ஆயிரம் ரூபாயை நிறுத்த முயற்சித்தால், நான் என் மக்களுக்கு ரூபாய் ஐந்தாயிரமாக தருவேன்" என சூளுரைத்து பிப்ரவரி, மார்ச், ஏப்ரல் ஆகிய மூன்று மாதங்களுக்கான தொகையினை முன்பணமாக ரூ.3000/-, கோடைக் கால சிறப்புத் தொகுப்பு ரூ.2,000/- என மொத்தம் ரூ.5000/-த்தினை தமிழ்நாட்டு பெண்களுக்கு வழங்கிய திராவிட மாடல் அரசின் சாதனைகளையும் வீடு வீடாக எடுத்துச் சொல்ல வேண்டும். அதுமட்டுமின்றி, 'திராவிடமாடல் 2.0' ஆட்சியில் கலைஞர் மகளிர் உரிமைத் தொகை மாதம் ரூ.2,000/-மாக உயர்த்தி வழங்கப்படும் என்ற எனது உறுதிமொழியையும், கலைஞர் மகளிர் உரிமைத் தொகை தடையின்றி தொடர, கழக ஆட்சி தொடர்வது அவசியம் என்பதையும் மகளிர்க்கு உணர்த்திட வேண்டும்.

வரும் பிப்ரவரி 23-ஆம் தேதி முதல் "வெல்லும் தமிழ்பெண்கள் - வீடு வீடாகப் பரப்புரை" தொடங்கி, உலக மகளிர் தினமான மார்ச்-8ஆம் தேதிக்குள் அனைத்து வீடுகளையும் சென்றடையும் வகையில் சிறப்பாக நடத்திட வேண்டும்.

கழகத்தின் வரலாற்றுச் சிறப்புமிக்க கழகத்தின் வெற்றியை உறுதி செய்து மீண்டும் தி.மு. கழகத்தை ஆட்சிக் கட்டிலில் அமர்த்திட புறப்பட்டுவிட்டது இந்த ஸ்டாலினின் மகளிர் படை என இப்பரப்புரை சிறப்பிட அமைந்திட வேண்டும்.

வெல்லும் தமிழ்ப் பெண்கள் பரப்புரைக்கான அனைத்து ஏற்பாடுகளையும் மண்டல பொறுப்பாளர்கள் - பொறுப்பு அமைச்சர்கள் - மாவட்டக் கழகச் செயலாளர்/பொறுப்பாளர்கள் செய்துதர வேண்டுமென கேட்டுக் கொள்கிறேன்.


இவ்வாறு அதில் கூறப் பட்டுள்ளது.


Breaking NEWS Card.com
www.breakingnewscard.com
BREAKING NEWS
We Create Professional
Breaking News Cards
Daily 4 Cards Plus
get News Portal FREE
Call: 7789951009
₹999 ONLY


ADVERTISE WITH US
CONTACT US
9438610756


Low Cost Matrimony Website
999 SITE
MATRIMONY
WEBSITE
RS.999/-
Call/Whatsapp - +91 7789951009


FREE MARRIAGE
INFORMATION CENTER :
இலவச திருமண
தகவல் மையம்
இலவச திருமண தகவல் மையம்
யாருக்கும் பணம் தர தேவை இல்லை
பணம் வங்கும் புரோக்கர்கள் தவிர்க்கவும்
www.enthuani.com
Call: 9337501889


FINDING THE PERFECT HOUSE YOU CAN CALL HOME
PREMA ENTERPRISES
DO YOU WANT TO
BUY
OR
SELL
PROPERTY OR LAND?
+91 9884417843


Vilambaram
We provide
Targeted Leads
to grow your
buisness
Boost your business
Call:: 91 7789941009, 9337501889
www.vilambaram.com


THINKING to BUY / SELL / RENT
a PROPERTY
New / Resale ...
Residential / Commercial ...
Plots Flats House
Villa Bungalows
Farm Land Ware Houses
Factory Sites Sheds
JOINT VENTURES INVITED
MK REAL ESTATE
Tell me your Budget We Show Your Home
Call :7871617005


ANY MLM PLAN
INR PLAN
RS.20000
CRYPTO PLAN
RS.30000
NO HIDDEN OR EXTRA CHARGES
SOURCE CODE AVAILABLE
CALL 9853719337 / 7436914247


Vilambaram
WE HELP YOU TO
BOOST
YOUR BUSINESS
VISIT:VILAMBARAM.COM CONTACT: 8122798599


Vilambaram
www.vilambaram.com
WE ARE Digital Marketing Agency
We are the
LEADS GENERATION
FACTORY
For Your
REAL ESTATE
BUSINESS
* Business Lead
* 100% Verified Lead
* Targeted Lead
GROW YOUR BUSINESS WITH US
for more details
+91 7789941009
+91 9337501889
vilambarampage@gmail.com
80 %OFF SPECIAL OFFER
90 DAYS MONEY BACK GUARANTEE


Get Free Jobs Alert on Your
WhatsApp
Register Yourself on our
8122664699
WhatsApp Your Name, Age & Address
on Above Number
Josh Jobs Team Give u Daily Update of
Govt. as Well as Private Jobs


ST COURIER
The People's Choice
ISO 9001:2008 Certified
DOMESTIC- INTERNATIONAL
Old No. 1/2, New No.3, Kesavan St.,
Tondiarpet, Chennai-600081.
Cell: 9176130601


SEVEN STARS
LOGISTICS PVT.LTD.
we simplify shipping for your business
Our Services are ...
Freight Forwarding, International Courier,
Customs Clearance, Cargo Movement by Air,
Sea and Road, Door to Door Service.
# 2, 2nd floor, Krishnan Koil Street, George Town,
Chennai - 600 001. INDIA.
+91 44 43570909 +91 96770 88843
info@sevenstarslogistics.com www.sevenstarslogistics.com


just499®
MLM SOFTWARE
All Types of MLM Software Solutions Available
Binary Unilevel Matrix Board Generation ROI / Investment
ONLY
Rs. 499
Website:
just499.com
Phone/WhatsApp:
7789951009
Email:
orderjust499@gmail.com


Sri Manjal Mart
தரமான ஆன்மீக பூஜை
பொருள்களை குறைந்த விலையில்
நிறைவாக வாங்க
20% OFF
www.manjalmart.com
7789951009
order@manjalmart.com


CAR WASH
SADHANA DEVI.K
SUPREME
Car Wash
& Detailing
Car Foam Pressure Wash
Teflon Coating
Ceramic Wax Treatment
Under Chassis Painting
Interior Foam Wash / Stain Remover
Paint Correction / Protection
We Done Here
9840882711
7200043675
Supremecarwashchennai@gmail.com
No.17/4, Senniamman Koil Street, Tondiarpet, Chennai – 600 081.


Telecaller Job
Apply Today
Mobile Calling !!!!
Rs 250-Rs500 per day
Work From Home Jobs
Ananda Bhaskar
Rs 8000 - Rs 15000 per month
9337501889
7789941009


அருள்தரும்
தெய்வம்
என்றும் நம் இல்லங்களில்
அற்புதமான
ஆன்மீக செய்திகள்,
பரிகாரங்கள்,
ஸ்தல வரலாறு மற்றும்
சுவாரஸ்யமான
தகவல்கள் மாதம்
இருமுறை படித்து
ஆன்மீகத்தை
அறியுங்கள்..
www.arultharumdeivam.com


S.R
Call Drivers
Travels
24 Hours
Man Power & All Vehicle Available
Prop. S.SRIRAM
Contact: 95513 81576 / 86086 22056
True Work is Our Capital
No.89/49,E.H.Road,Cornation Nagar,K.Pet,Ch-21.

## கவிதை அரங்கம்!



கிடைக்கும் வாய்ப்புகளைப்
பயன்படுத்தி வெற்றிக்
கனியை எட்டுபவனே
சாமர்த்தியசாலி ஆகிறான்

விடாமுயற்சி என்ற
ஒற்றை நூல் சரியா
இருந்தால் வெற்றி
எனும் பட்டம்
நம் வசமே


வெற்றிக்கு தான்
எல்லைகள்

முயற்சிக்கு ஏது
எல்லைகள்

இங்கு பாதைகள்
வெற்றியை
தீர்மானிப்பது இல்லை
பயணிப்பவன் முயற்சிகளே
வெற்றியை தீர்மானிக்கிறது

வெற்றி பெறுவதை
உன்னை தவிர
வேறு எவராலும்
தடுக்கவே முடியாது

## வாழ்க்கை தத்துவம்...



வாழ்வின் உண்மையான செல்வம்
தினசரி அனுபவங்களில் மறைந்திருக்கும்

வாழ்க்கை சிறியது
ஆனால் நினைவுகளை
உருவாக்கும் வாய்ப்புகள் பெரியது

ஒவ்வொரு நாளும்
ஒரு புதிய வாய்ப்பு
நேற்று நடந்ததை
இன்றைக்கு கொண்டு வராதே

இழந்ததை நினைத்தால் துக்கம்
கற்றதை நினைத்தால் வளர்ச்சி

வாழ்க்கை புயல்களை
தவிர்க்கும் பயணம் அல்ல
அவற்றில் நடனமாட
கற்றுக்கொள்வதே

## 'மியாவ்..."

சுரேஷுக்கு 'எலுரோபோபியா'.

அப்படியென்றால், பூனையைக் கண்டு பயந்து நடுங்கும் ஒரு வியாதிக்குப் பெயர்தான் 'எலுரோபோபியா'.

சுரேஷுக்கு பூனையை பார்த்து விட்டல் போதும் இதயமே துடிப்பதை நிறுத்தி விடும் போலாகிவிடும். கைகால் நடுங்கும். வியர்த்து வடியும். தொண்டை வறண்டு போகும்.

அன்று சுரேஷ் அலுவலகத்திலிருந்து வீடு திரும்ப இரவாகி விட்டது. தெரு விளக்குகள் மங்கலாக எரிந்து கொண்டிருந்தன.

தூரத்தில் ஒரு ஜோடி கண்கள் மின்னுவதைக் கண்டான். அவனது கால்கள் அங்கேயே உறைந்து நின்றன. அந்த உருவம் மெதுவாக அவனை நோக்கி நகரத் தொடங்கியது.

அதன் 'மியாவ்' சத்தம் காற்றில் தவழ்ந்து வந்தபோது, சுரேஷுக்கு உடல் நடுங்கத் தொடங்கியது. நெற்றியில் வேர்வை துளிர்த்தது. அவன் தன் பையை இறுகப் பிடித்துக் கொண்டு வேகமாக நடக்கத் தொடங்கினான்.

அவன் வேகம் எடுக்க, அந்தப் பூனையும் அவனைப் பின் தொடர்ந்தது

திடீரென்று அது ஒரு சுவற்றின் மீதேறி, அவன் தலைக்கு நேராக நின்றது. அதன் கண்கள் இருட்டில் அம்புகளைப் போல ஜொலித்தன. சுரேஷ் பயத்தில் கண்களை மூடிக் கொண்டான். மூச்சு வாங்கியது.

மெல்ல ஒரு கண்ணைத் திறந்து பார்த்தான். அந்தப் பூனை எங்கோ காணாமல் போயிருந்தது. ஆனால், அவனது பயம் மட்டும் போகாமலே இருந்தது.

வேக வேகமாய்ச் சென்று வீட்டின் கதவைத் திறந்து உள்ளே நுழைந்து தாழிட்ட பிறகுதான் அவனுக்கு உயிர் வந்தது. சோபாவில் அமர்ந்து பெருமூச்சு விட்டான்.

அப்போது மீண்டும் அந்த ஓசை. "மியாவ்... மியாவ்"

தேடினான். சோபாவிற்கு அடியிலிருந்து அந்தச் சத்தம் வர குனிந்து பார்த்தான்.

"அய்யோ..." கத்தியபடி எழுந்தான்.

பயத்தில் மீண்டும் ஒருமுறை அவன் இதயம் எகிறியது.

"அங்கிள்...அங்கிள்... எங்க பிங்கி இங்க வந்திச்சா?" கேட்டவாறே பக்கத்து வீட்டு எல்.கே.ஜி.சிறுமி உள்ளே வர, "மியாவ்" சத்தம் கேட்டது.

சத்தம் வந்த இடத்தைக் கண்டு பிடித்து விட்ட சிறுமி கீழே உட்கார்ந்து சோபாவிற்கு அடியிலிருந்த பூனையைக் கையால் பற்றி வெளியில் இழுத்தாள்.

திகிலுடன் சுரேஷ் பார்க்க, அதை நெஞ்சோடு அணைத்து முத்தமிட்ட சிறுமி, "என்ன பிங்கி... சாப்பிடற நேரமாச்சே... பசிக்கலையா?" கேட்டபடியே வெளியேற,

அந்த நிமிடத்தில் சுரேஷின் மூளைக்குள் ஒரு ஃப்ளாஷ் அடித்தது. "இந்தச் சின்னப் பொண்ணு கொஞ்சமும் பயப்படாம பூனையைக் கைல தூக்கிக் கொஞ்சிட்டுப் போகுது... ஆனா நான் மட்டும் ஏன் நடுங்கறேன்!..." யோசித்தான்.

"அப்படின்னா... எனக்கு இருக்கும் இந்த 'எலுரோபோபியா' ஒரு வியாதியல்ல... என்னோட மனசுக்குள் ஒளிந்திருக்கும் ஒரு மாய நிழல்... நான் நெனைச்சா அதை ஈஸியாத் தூக்கி எறியலாம்!".

அன்று முதல் அவன் பூனைகளுக்கு பயப்படுவதிலிருந்து விடுபட்டான்.

பெரிய பெரிய மனநல நிபுணர்களால் குணப்படுத்த முடியாத அவனது 'எலுரோபோபியா"வை எளிதாய்த் தீர்த்து விட்ட சிறுமியைப் பாராட்டத் தேடினான்.

(முற்றும்)



**முகில் தினகரன்**
கோயமுத்தூர்

## சிரிப்பு வருது.! சிரிப்பு வருது.!!



*உன் பெயரைக்கூட நான் எழுதுவதில்லை..*
*ஏன் தெரியுமா?*
*"பேனா" முனை உன்னை குத்திவிடுமோ என்று..*

*இப்படிக்கு*
*SPELLING தெரியாமல் சமாளிப்போர் சங்கம்*



## தினம் ஒரு சமையல்



### ரவை அடை

**தேவையான பொருட்கள்:**

| | |
|---|---|
| ரவா | - 3 கப் |
| கடலை மாவு | - 1 & 1/4 கப் |
| வெங்காயம் | - 6 |
| சிவப்பு மிளகாய் | - 9 |
| மஞ்சள் தூள் | - 1/4 தேக்கரண்டி |
| சோம்பு (சோம்பு) | - 2 தேக்கரண்டி |
| கறிவேப்பிலை | - சில |
| கொத்தமல்லி இலைகள் | - தேவையானவை |
| புதினா இலைகள் | - 10 |
| சுவைக்க | - உப்பு |
| எண்ணெய் | |

**செய்முறை:**

* ரவாவை 3 முதல் 4 கப் தண்ணீரில் ஒரு மணி நேரம் ஊற வைக்கவும்.
* பின்வரும் விஷயங்களை நறுக்கி ஒதுக்கி வைக்கவும் - வெங்காயம், கொத்தமல்லி, புதினா மற்றும் கறிவேப்பிலை.
* சிவப்பு மிளகாய் மற்றும் சோம்பு மிக்ஸியில் அரைத்து (சிறிது தண்ணீரைப் பயன்படுத்துங்கள்) அதை ஒதுக்கி வைக்கவும்.
* கடலை மாவு ஊறவைத்த ராவாவில் கலந்து நன்கு கலக்கவும்.
* பின்னர் கிரைண்ட் பேஸ்ட் (சிவப்பு மிளகாய் மற்றும் சோம்பு) கலக்கவும்.
* இப்போது நறுக்கிய வெங்காயம், கொத்தமல்லி, புதினா மற்றும் கறிவேப்பிலை சேர்க்கவும். பின்னர் உங்கள் சுவைக்கு ஏற்ப உப்பு சேர்க்கவும்.
* தோசை கடாயை சூடாக்கி, மூடியுடன் நடுத்தர தீயில் தோசை செய்யுங்கள். (இது நேரம் எடுக்கும், அரிசி மாவு தோசை விட சற்று அதிகம்)
* தேங்காய் சட்னியுடன் சூடாக பரிமாறவும்.




## மலைவேம்பு பயன்கள்



மலைவேம்பு (MELIA DUBIA) மருத்துவ மற்றும் பொருளாதார முக்கியத்துவம் வாய்ந்த ஒரு மரமாகும். இதன் இலை, பூ, பட்டை, காய் ஆகியவை மாதவிடாய் கோளாறுகள், வயிற்றுப் புழுக்கள், காய்ச்சல் மற்றும் வாத நோய்களை குணப்படுத்த பாரம்பரிய மருத்துவத்தில் பயன்படுகின்றன. இது தவிர, வேகமான வளர்ச்சி மற்றும் தரமான மரக்கட்டைகளுக்காக விவசாயத்தில் ஒரு சிறந்த வருவாய் தரும் பயிராக மலைவேம்பு வளர்க்கப்படுகிறது.

மலைவேம்புவின் முக்கிய மருத்துவப் பயன்கள்:

மாதவிடாய் சீராக்கம்: பெண்களின் மாதவிடாய் காலத்தில் ஏற்படும் கடுமையான வயிற்று வலி மற்றும் ஒழுங்கற்ற மாதவிடாய் பிரச்சினைகளுக்கு சிறந்த தீர்வாக மலைவேம்பு பயன்படுகிறது.

வயிற்றுப்புழு நீக்கம்: வயிற்றுப்புழுக்களை (INTESTINAL WORMS) அழித்து செரிமான மண்டலத்தை சுத்தப்படுத்துகிறது.

சரும ஆரோக்கியம்: தோல் நோய்கள், சொறி, சிரங்கு மற்றும் வேரிகோஸ் வெயின் (VARICOSE VEINS) பிரச்சினைகளுக்கு மருந்தாகப் பயன்படுகிறது.

காய்ச்சல் மற்றும் வாதம்: காய்ச்சல், வாத நோய் மற்றும் கபம் தொடர்பான நோய்களை குணப்படுத்தவும், உடலுக்கு வலு சேர்க்கவும் உதவுகிறது.

பயன்படுத்தும் முறைகள்:

மலைவேம்பு இலை சாற்றை கஷாயமாக்கி காய்ச்சிய பால் மற்றும் தேன் கலந்து பருகுவது மாதவிடாய் வலிக்கு ஏற்றது.

பூ, பட்டை போன்றவை பல்வேறு மூலிகை வைத்தியங்களில் பயன்படுத்தப்படுகின்றன.


பொருளாதாரப் பயன்கள்:

வேகமான வளர்ச்சி: மிகக் குறுகிய காலத்தில் (5-7 ஆண்டுகள்) வளரக்கூடியது.

மரக்கட்டை: வீடு கட்டுதல், பிளைவுட் (PLYWOOD) தொழிற்சாலைகள் மற்றும் மரச்சாமான்கள் செய்ய சிறந்த மரமாக உள்ளது.

பொறுப்புத்துறப்பு: மூலிகை மருந்துகளை உட்கொள்வதற்கு முன் தகுந்த மருத்துவர் அல்லது சித்த மருத்துவரை அணுகுவது நல்லது.

## ரஜினிக்கு சொன்ன கதையில் இப்போது சூர்யா.. பிளாக்பஸ்டர் ஹிட் கொடுத்த இயக்குநருடன் கூட்டணி



கருப்பு, சூர்யா 46 & 47 என தொடர்ந்து மூன்று படங்களை கைவசம் வைத்துள்ளார் சூர்யா. இதில் கருப்பு திரைப்படம் ரிலீஸுக்கு தயாராகவுள்ளது. தமிழக தேர்தல் முடிந்தபின் இப்படம் வெளிவரும் என படத்தின் இயக்குநர் ஆர். ஜே. பாலாஜி தெரிவித்துள்ளார். சூர்யா 46 மற்றும் 47 ஆகிய படங்களின் படப்பிடிப்பு தற்போது விறுவிறுப்பாக நடைபெற்று வருகிறது. இதில் சூர்யா 47 படத்தில் நடிகர் சூர்யா மீண்டும் போலீஸ் அதிகாரியாக நடிக்கிறார் என தகவல் வெளியாகியுள்ளது.

இந்நிலையில், சூர்யா அடுத்ததாக இயக்குநர் அஸ்வத் மாரிமுத்து இயக்கத்தில் நடிக்கப்போவதாக தகவல் வெளியாகியுள்ளது. அஸ்வத் மாரிமுத்து தற்போது சிம்புவை வைத்து GOD OF LOVE என்கிற படத்தை இயக்கவுள்ளார். இப்படத்திற்கான அறிவிப்பு வெளிவந்த நிலையில், முன்தயாரிப்பு பணிகள் விறுவிறுப்பாக நடைபெற்று வருகிறது.

இதற்கிடையில் ரஜினியிடம் ஒரு கதை கூறியிருந்தார் இயக்குநர் அஸ்வத் மாரிமுத்து. கதை பிடித்திருந்தாலும் ரஜினி - அஸ்வத் மாரிமுத்து இணையும் படம் டேக்ஆப் ஆகவில்லை. இந்த நிலையில், ரஜினிக்கு சொன்ன கதையை தற்போது சூர்யாவிடம் கூறி ஓகே செய்துள்ளாராம் அஸ்வத்.

இது கமர்ஷியல் என்டர்டெய்னிங் படமாக, அயன் படத்தில் இருக்கும் வைப் இப்படத்தில் இருக்கும் என கூறப்படுகிறது. ஆனால், இது தற்போது திரை வட்டாரத்தில் உலா வரும் தகவல் மட்டும்தான், இதுகுறித்து அதிகாரப்பூர்வ அறிவிப்பு வெளி யாகிறதா என்பதை பொறுத்திருந்து பார்ப்போம். இயக்குநர் அஸ்வத் மாரிமுத்து கடந்த ஆண்டு டிராகன் எனும் பிளாக்பஸ்டர் ஹிட் படத்தை கொடுத்தி ருந்தார் என்பது குறிப்பிட த்தக்கது.



அம்ரிதா ஐயர் அழகிய சேலையில் கியூட் ஆக போஸ் கொடுத்து இருக்கும் லேட்டஸ்ட் ஸ்டில்கள் ரசிகர்களை அதிகம் கவர்ந்து வருகிறது. இதோ பாருங்க.

## சினிமா

## சார் ரம்பா சார்.. 16 வருடங்களுக்கு பின் சினிமாவில் என்ட்ரி கொடுக்கும் நடிகை ரம்பா..



இயக்குநர் சுந்தர்.சி இயக்கத்தில் வெளிவந்த உள்ளத்தை அள்ளித்தா படத்தின் மூலம் தமிழ் சினிமாவில் கதாநாயகியாக அறிமுகமானவர் நடிகை ரம்பா.

இதன்பின் செங்கோட்டை, அருணாச்சலம், காதலா காதலா, மின்சார கண்ணா, அன்புடன், ஆனந்தம், மிலிட்டரி, 3 ரோஸஸ் என பல திரைப்படங்களில் நடித்து வந்தார். இதில் உன்னருகே நானிருந்தால் படத்தில், ரம்பாவை பார்த்து நடிகர் பார்த்திபன் 'சார் ரம்பா சார்' என சொல்லும் வசனம் இன்று வரை ரசிகர்கள் மத்தியில் பிரபலமாக உள்ளது.

தமிழ் மட்டுமின்றி மற்ற மொழி திரைப்படங்களிலும் பிஸியாக நடித்து வந்தார்.


ஆனால், திடீரென சினிமாவிலிருந்து விலகினார். இது அவருடைய ரசிகர்களுக்கு சற்று வருத்தத்தை கொடுத்தது.

இந்த நிலையில், 16 வருடங்களுக்கு பின் நடிகை ரம்பா மீண்டும் சினிமாவில் நடிக்கப்போவதாக தகவல் வெளியாகியுள்ளது. புதிய கதைகளை கேட்டு அதில் ஓரிரு கதைகளை தேர்ந்தெடுத்துவிட்டதாகவும் கூறப்படுகிறது. நடிகை ரம்பா மீண்டும் நடிக்க வந்துள்ளதாக வெளியாகியுள்ள செய்தி, அவருடைய ரசிகர்களுக்கு மகிழ்ச்சியை கொடுத்துள்ளது.

# குளிக்கும் போது நாம் பின்பற்ற வேண்டிய ஒரு சில விதிமுறைகள்

* குளிக்கும் போது ஒரு சில விதிமுறைகளை நாம் பின்பற்ற வேண்டும் என்பது ஐதீகம்.
* குளிக்கும் போது வடக்கு அல்லது கிழக்கு திசை நோக்கி நின்று குளிக்க வேண்டும்.
* கர்மம் செய்த பின்னும், மயானத்திற்கு சென்று வந்தால் மட்டும் தெற்கு நோக்கி நின்று குளிக்கலாம்.
* மேற்கு திசை நோக்கி நின்று குளித்தால் உடல் நோவு வரும்.
* தினமும் கங்கா ஸ்நானம் செய்ய முடியும்.
* குளிக்கும் முன் ஒரு குவளை தண்ணீரில் மோதிர விரலால் ஓம் என்று தியானம் செய்து எழுதுங்கள்.
* அந்த நீர் அப்போது முதல் கங்கை நீராக மாறிவிடும். ஒரு நிமிட தியானத்தில் "இந்த உடலுக்குள் நீங்களே வந்திருந்து, இதை உங்களுக்கு செய்யும் அபிஷேகமாக ஏற்று கொள்ளுங்கள்" என்று இறையிடம் வேண்டி கொண்டு குளித்தால், உள்பூசையின் அங்கமாக இறைவனுக்கு அபிஷேகமும் ஆகிவிடும்.
* அக்னி எப்போதும் மேல்நோக்கியே பயணிக்கும்.
* உடலுக்குள் இருக்கும் அக்னி கீழிருந்து மேல் ஏறுவதுதான் சரி.
* தண்ணீரை கால் முதல் மேல் நோக்கி நனைத்து வந்து கடைசியில் தலையில் ஊற்றி கொள்ள வேண்டும்.
* நமது மண்டை ஓடுக்கு எப்படிப்பட்ட அக்னியின் வேகத்தையும் தாங்குகிற சக்தி உண்டு.
* காலில் இருந்து பரவும் குளிர்ச்சி மேல் நோக்கி பயணிக்கும் போது உள் அக்னியானது தலையை நோக்கி பயணிக்கும். அதுவே சரியான முறை.
* தலை முதல் கால் வரை உள்ள பின் பாகத்தை "பிரஷ்டம்" என்பர்.
* அதில் நம் முதுகு பாகம் தான் மிகப்பெரியது. அங்கு தான் அக்னியின் வீச்சம் கூடுதல் வேகமாக பரவும்.
* ஆதலால், குளித்து முடித்தவுடன், முதலில் முதுகு பாகத்தைதான் துவட்ட வேண்டும்.
* குளிக்கும் நீரிலே டவலை நனைத்து பிழிந்து துவட்டுவது தான் உத்தமம்.
* அனேகமாக, அனைவரும் ஈரம் படாத துண்டைத்தான் உபயோகிப்பீர்கள்.





* உலர்ந்த துணியானது உள் சூட்டை வேகமாக பரவ செய்து பல வித உள் நோவுகளை உருவாக்கும்.
* பிறருடன் வாய் திறந்து பேச கூடாத மூன்று நேரங்களில் ஒன்று குளிக்கும் நேரம்.
* மௌனத்தை கடைபிடிக்கலாம், அல்லது மனதளவில் தெரிந்த ஜெபத்தை செய்யலாம்.
* குளிப்பதினால், பஞ்ச இந்த்ரியகளால் செய்த தவறுகளினால் நமக்குள் சேர்த்து வைத்துள்ள கர்மாக்கள் களைய பெறுகிறது.
* குளிக்கும் போது, வாயில் கொள்ளளவு நீரை வைத்து குளித்தபின் துப்புவதால், கண்டத்துக்குமேல் (கழுத்துக்கு) வருகிற நீர் சம்பந்தமான கட்டுகளை, நோய்களை தவிர்க்கலாம்.
* வாயில் இருக்கும் நீர் மேல் நோக்கி எழும்பும் அக்னியின் வேகத்தை எடுத்துவிடும்.
* நீர் நிலைகள், குளம், ஆறு, கடல் இவைகளில் எல்லா தேவதைகளும், பெரியவர்களும் அருபமாக ஸ்நானம் செய்வதாக கூறுகிறார்கள்.
* நாரம் என்கிற தண்ணீரில் நாராயணன் வாசம் செய்வதாகவும் சொல்வார்கள்.
* ஆதலால், ஓடி சென்று அதில் குதிக்காமல், கரையில் நின்று, சிறிது நீரை எடுத்து தலையில் தெளித்தபின், நீர் கலங்காமல், ஒரு இலை நீரில் விழுகிற வேகத்தில் மெதுவாக இறங்கி சென்று குளிக்க வேண்டும்.
* நீரில் காரி உமிழ்வதோ, துப்புவதோ கூடாது.
* நீரின்றி ஒரு உயிரும் இல்லை.நீரை விரயம் செய்ய கடன் அதிகரிக்கும்.
* உப்பு நீர் ஸ்நானம் திருஷ்டி தோஷங்களை அறுக்கும்.
* மேற்குறிப்பிட்ட அனைத்தும் குளிக்கும் போது நாம் பயன்படுத்த கூடிய நல்ல முறைகள் என்பது குறிப்பிடத் தக்கது.



**ப.கோபிபச்சமுத்து**
புதுப்பேட்டை,
கிருஷ்ணகிரி - 1

**தினம் ஒரு தலைவர்கள்**

# சந்திர ராஜேஸ்வர ராவ் வரலாறு

சந்திர ராஜேஸ்வர ராவ் (ஜூன் 6, 1914 – ஏப்ரல் 9, 1994) ஒரு இந்திய கம்யூனிஸ்ட் அரசியல்வாதி ஆவார். அவர் தெலுங்கானா கிளர்ச்சியின் (19461951) தலைவர்களில் ஒருவராக இருந்தார் . 1992 ஆம் ஆண்டு உடல்நலக் காரணங்களுக்காகப் பதவி விலகுவதற்கு முன்பு, இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் (சிபிஐ) பொதுச் செயலாளராகவும் 28 ஆண்டுகள் பணியாற்றினார்.

வாழ்க்கை

ராவ் ஒரு வசதியான விவசாயக் குடும்பத்தைச் சேர்ந்தவர். அவர் ஜூன் 6, 1914 அன்று இந்தியாவின் ஆந்திரப் பிரதேச மாநிலத்தின் கிருஷ்ணா மாவட்டத்தில் உள்ள மங்களபுரம் கிராமத்தில் பிறந்தார். வாரணாசியில் உள்ள பனாரஸ் இந்து பல்கலைக்கழகத்திலும் விசாகப்பட்டினத்தில் உள்ள ஒரு மருத்துவக் கல்லூரியிலும் மருத்துவக் கல்வியைப் பெற்றார் . 1931 இல் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியில் (சிபிஐ) சேர்ந்தார். ராவ் 1954 மற்றும் 1955 இல் அகில இந்திய கிசான் சபாவின் (விவசாயிகள் சங்கம்) துணைத் தலைவராக இருந்தார். டிசம்பர் 1964 இல் அவர் சிபிஐ தேசிய கவுன்சிலின் பொதுச் செயலாளராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். அவருக்கு 1974 இல் ஆர்டர் ஆஃப் லெனின் வழங்கப்பட்டது .

அவரது மகன் சந்திர சந்திரசேகர் மற்றும் பேரன் சந்திர ஜெய்தீப் ஆகியோர் ஆந்திரப் பிரதேசத்தில் அரசியலில் ஈடுபட்டுள்ளனர்.

தெலுங்கானா கிளர்ச்சியில் பங்கேற்பு

1946 ஆம் ஆண்டு ஹைதராபாத்தில் நிலைமை மேலும் மேலும் பதட்டமாக மாறியது. இதற்கு பதிலளிக்கும் விதமாக, ஆந்திர மகாசபாவும் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியும் (சிபிஐ) ஆயுதமேந்திய எதிர்ப்பைத் தேர்ந்தெடுத்தன, அதுதான் மக்களுக்குத் திறந்திருக்கும் ஒரே நடவடிக்கை என்று நம்பின. பி.சி. ஜோஷியின் தலைமையில் , சிபிஐ நிஜாமின் ஆட்சியை அகற்றும் குறிக்கோளுடன் ஆயுதமேந்திய போராட்டத்தைத் தொடங்கியது. இந்த மோதல் 1946 முதல் 1948 வரை நீடித்தது.

இந்தக் காலகட்டத்தில் இந்தியா சுதந்திரம் பெற்றது, ஹைதராபாத்தில் ஒரு கம்யூனிஸ்ட் இந்தியக் கொடியை ஏற்றினார். இருப்பினும், நிஜாம் இந்தியாவுடன் இணைய மறுத்துவிட்டார், இதனால் மாநில ஒருங்கிணைப்புக்கான பேச்சுவார்த்தைகள் தேவைப்பட்டன. இதற்கிடையில், பிப்ரவரி 1948 இல் கல்கத்தாவில் நடந்த சிபிஐயின் இரண்டாவது மாநாட்டில் இடதுசாரி பிரிவினைவாத மற்றும் சாகசவாதத் தலைமையின் எழுச்சி காணப்பட்டது, இது பி.சி. ஜோஷியை நீக்கி, பி.டி. ரணதிவே பொதுச் செயலாளராக நியமிக்கப்பட்டதற்கு வழிவகுத்தது. தெலுங்கானா ஆயுதப் போராட்டத்தில் முக்கிய நபரான ரணதிவேவின் கொள்கைகள் கட்சிக்குள் உலகளவில் ஏற்றுக்கொள்ளப்படவில்லை, ஆனால் ஆந்திராவைச் சேர்ந்தவர்கள் உட்பட பலர் ஆயுதப் போராட்டத்தை ஆதரித்தனர். பொதுவான கருத்து இருந்தபோதிலும், அவர் 1948 இல் மத்திய குழுவிற்கு தேர்ந்தெடுக்கப்பட்டார், பொலிட்பீரோவிற்கு அல்ல.



கட்சிக்குள், பெரும்பாலும் 'ரஷ்ய வழி' மற்றும் 'சீன வழி' என்று அழைக்கப்படும் மாறுபட்ட கருத்துக்கள் இருந்தபோதிலும், இரு பிரிவுகளும் ஆயுதப் போராட்டம் குறித்து ஒன்றிணைந்தன. செப்டம்பர் 13, 1948 வாக்கில், இந்தியப் படைகள் நிஜாமை வீழ்த்தி ஹைதராபாத்தை இந்தியாவுடன் இணைத்தன, விவசாயிகளுக்கு சலுகைகளையும் வழங்கின. ஆயுதப் போராட்டத்தின் முதன்மை நோக்கங்கள் இவைதான், அவை தர்க்கரீதியாக முடிவுக்கு வந்திருக்க வேண்டும். இருப்பினும், மத்தியத் தலைமை போராட்டத்தைத் தக்க வைத்துக் கொண்டது.

இந்தக் கொள்கையின் பேரழிவு விளைவுகள் 1950 ஆம் ஆண்டு வாக்கில் தெளிவாகத் தெரிந்தன, இதன் விளைவாக ஜூன் 1950 இல் கல்கத்தாவில் நடந்த மத்தியக் குழுக் கூட்டத்தில் ரணதிவேக்குப் பதிலாக சி.ராஜேஸ்வர ராவ் பொதுச் செயலாளராக நியமிக்கப்பட்டார். புதிய 'ஆந்திரக் கோட்டின்' சிற்பியான ராவ், நெருக்கடியைத் தீர்க்கத் தவறிவிட்டார், இது இந்த அணுகுமுறையும் குறைபாடுடையது என்பதை உணர வழிவகுத்தது. இதன் விளைவாக, சி. ராஜேஸ்வர ராவ், எஸ்.ஏ. டாங்கே, கே. கோவிந்த ராவ், சி.ஆர். வல்லபன் ஐயர் (மணி ஐயர்), பசவ்புன்னையா மற்றும் அஜோய் கோஷ் உள்ளிட்ட நான்கு பேர் கொண்ட சிபிஐ குழு, மூலோபாயம் மற்றும் தந்திரோபாயங்கள் குறித்து ஸ்டாலினுடன் கலந்தாலோசிக்க சோவியத் யூனியனுக்குச் சென்றது. இது ஏப்ரல் 1951 இல் வரைவு கட்சித் திட்டங்கள் மற்றும் கொள்கை அறிக்கைகளை வெளியிடுவதற்கும், 1951 இல் கல்கத்தாவில் நடந்த ஒரு சிறப்பு மறைமுகக் கட்சி மாநாட்டில் அஜோய் கோஷ் பொதுச் செயலாளராகத் தேர்ந்தெடுக்கப்படுவதற்கும் வழிவகுத்தது.

PRGI No. TNBIL/25/A1569
பேப்பர்பாய்
சென்னை வியாழக்கிழமை 19.02.2026

# ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ். அதிகாரிகளில் 90 சதவீதம் பேர் ஓபிசி பிரிவைச் சேர்ந்தவர்கள்- மத்திய அரசு

**புதுடெல்லி, பிப்.19:**

கேரள எம்.பி. ஜான் பிரிட்டஸ், நாட்டில் அகில இந்திய பணிகளுக்காக கடந்த 5 ஆண்டுகளில் நடந்த நியமனங்களில் இடஒதுக்கீடு வாரியான விவரங்களையும், காலிப்பணியிடங்கள் குறித்தும் மாநிலங்களவையில் கேட்ட கேள்விக்கு மத்திய பணியாளர், பொது குறைகள் மற்றும் ஓய்வூதியத்துறை இணை மந்திரி ஜிதேந்திர சிங் எழுத்துப்பூர்வமாக பதில் அளித்திருந்தார்.

அதில், 1-1-2025 நிலவரப்படி நாட்டில் 6,877 ஐ.ஏ.எஸ். பணியிடங்களும், 5,099 ஐ.பி. எஸ். பணியிடங்களும், 3,193 ஐ.எப்.எஸ். பணியிடங்களும் அங்கீகரிக்கப்பட்டுள்ளதாகவும், இதில் 1,300 ஐ.ஏ.எஸ். பணியிடங்களும், 505 ஐ.பி. எஸ். பணியிடங்களும், 1,029 ஐ.எப்.எஸ். பணியிடங்களும் காலியாக உள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.இந்த காலியிடங்களில் தமிழ்நாட்டில் 51 ஐ.ஏ.எஸ். பணியிடங்கள் காலியாக உள்ளன. இதுபோல் ஐ.பி.எஸ். பணியிடங்களில் 34-ம், ஐ.எப்.எஸ். பணியிடங்களில் 50-ம் காலியாக உள்ளன.

கடந்த 5 ஆண்டுகளில் (2020 2024) நியமனம் செய்யப்பட்ட இந்த பணியிடங்களில் இதர பிற்படுத்தப்பட்டோர் அதிகம் உள்ளனர். ஐ.ஏ.எஸ். பதவியில் இதர பிற்படுத்தப்பட்டோர் 245 பேர் நியமிக்கப்பட்டுள்ளனர். தாழ்த்தப்பட்டோர் 135 பேரும், பழங்குடியினரில் 67 பேரும் நியமிக்கப்பட்டுள்ளனர்.ஐ.பி. எஸ். பதவியில் இதர பிற்படுத்தப்பட்டோரின் எண்ணிக்கை 255 ஆக உள்ளது.

தாழ்த்தப்பட்டோரின் எண்ணிக்கை 141 ஆகவும், பழங்குடியினரின் எண்ணிக்கை 71 ஆகவும் உள்ளது.ஐ.எப். எஸ். பணியிடங்களில் இதர பிற்படுத்தப்பட்டோர் 231 பேர் நியமிக்கப்பட்டுள்ளனர். தாழ்த்தப்பட்டோர் 95 பேரும், பழங்குடியினர் 48 பேரும் நியமிக்கப்பட்டுள்ளனர். சதவீத கணக்கில் ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ். பதவிகளில் இதர பிற்படுத்தப்பட்டோர் 90 சதவீதத்துக்கும் மேற்பட்டோர் உள்ளனர் என தெரியவந்துள்ளது.

# 12-ஆம் வகுப்பு பொதுத் தேர்வில் மாணவர்கள் பார்த்து எழுத அனுமதித்த 5 ஆசிரியர்கள் இடைநீக்கம்

**பீட், பிப்.19:**

மகாராஷ்டிர மாநிலம் பீட் மாவட்டத்தில் உள்ள ஒரு மையத்தில் 12-ஆம் வகுப்பு பொதுத் தேர்வில் மாணவர்களைப் பார்த்து எழுத அனுமதித்த 5 ஆசிரியர்கள் பணியிடைநீக்கம் செய்யப்பட்டனர்.



தேர்வு மையத்தை கண்காணிப்பு கேமரா பொருத்தப்பட்ட ட்ரோன் மூலம் கண்காணித்தபோது, இந்த முறைகேடு கண்டறியப்பட்டது.

மகாராஷ்டிர மாநில கல்வி வாரிய பொதுத் தேர்வு கடந்த 10-ஆம் தேதி தொடங்கியது. பொதுத் தேர்வு தொடங்கிய முதல் நாளில் இந்த முறைகேடு நிகழ்ந்துள்ளது.

இதுகுறித்து அதிகாரிகள் கூறியதாவது: பொதுத் தேர்வில் மாணவர்கள் முறைகேடுகளில் ஈடுபடுவதைத் தடுக்கவும், தவறான கருத்தின் அடிப்படையில் மாணவர்கள் ஏமாற்றப்படுவதைத் தடுக்கும் நோக்கிலும் தேர்வு மையங்களில் கண்காணிப்பு கேமரா பொருத்தப்பட்ட ட்ரோன் மூலம் அதிகாரிகள் கண்காணிப்பை மேற்கொண்டனர். இதில், பீட் மாவட்டத்தில் அமைந்துள்ள 16 தேர்வு மையங்களில் மாணவர்கள் பெருமளவில் தேர்வை பார்த்து எழுதியதும், அதை தேர்வு கண்காணிப்பாளர்களே (ஆசிரியர்கள்) அனுமதித்ததும் கண்டறியப்பட்டது. அதனடிப்படையில் 17 ஆசிரியர்கள் மீது காவல் துறையில் முதல் தகவல் அறிக்கை (எஃப்ஐஆர்) பதிவு செய்யப்பட்டது.

இதில் லிம்பகணேஷில் உள்ள பாலசந்திர வித்யாலய பள்ளியைச் சேர்ந்த 5 ஆசிரியர்கள் மாணவர்கள் பார்த்தெழுத உதவியது விசாரணையில் உறுதியானதைத் தொடர்ந்து, அவர்கள் பணியிடைநீக்கம் செய்யப்பட்டனர். மற்ற 3 பள்ளிகளைச் சேர்ந்த 12 ஆசிரியர்களிடம் விசாரணை தொடர்ந்து வருகிறது. அவர்களும் பணியிடைநீக்கம் செய்யப்பட வாய்ப்புள்ளது. அதன்பிறகு, இவர்கள் அனைவரிடமும் அடுத்தகட்ட விசாரணை மேற்கொள்ளப்பட்டு, உரிய நடவடிக்கைமேற்கொள்ளப்படும் எனத் தெரிவித்தனர்.

# புதுச்சேரி பேரவைத் தேர்தலில் ம.நீ.ம.வுக்கு டார்ச்லைட் சின்னம் ஒதுக்கீடு

**புதுச்சேரி, பிப்.19:**

தமிழ்நாடு மாநிலம் மற்றும் புதுச்சேரி யூனியன் பிரதேசத்தில்சட்டப்பேரவைத் தேர்தலை நடத்துவதற்கான தீவிர ஏற்பாடுகளை தேர்தல் ஆணையம் மேற்கொண்டுள்ள நிலையில், இந்த அறிவிக்கை வெளியிடப்பட்டுள்ளது.

கடந்த பிப்ரவரி 11ஆம் தேதி 7 உறுப்பினர்கள் கொண்ட துணைத் தேர்தல் ஆணையர்கள் குழு தேர்தல் தயாரிப்புப்பணிகளை ஆய்வு செய்வதற்காக சென்னை விமான நிலையம் வந்தது. இந்தக் குழுவில் பன்வர் பிரகாஷ், மணீஷ் கர்க், பவன் குமார் சர்மா, சஞ்சய் குமார், ஆஷிஷ் கோயல் ஆகியோர் உள்பட இதர உயர் அதிகாரிகள் வந்திருந்தனர். ஏற்கெனவே அண்மை யில் ம.நீ.ம.வுக்கு தமிழக சட்டப் பேரவைத் தேர்தலில் பொதுச் சின்னம் ஒதுக்கும் வகையில் டார்ச் லைட் சின்னத்தை தேர்தல் ஆணையம் வழங்கியிருந்தது.


இதைத் தொடர்ந்து, புதுச்சேரி சட்டப் பேரவைத் தேர்தலிலும் அக்கட்சிக்கு பொதுச் சின்னமாக டார்ச் லைட் சின்னத்தை தேர்தல் ஆணையம் வழங்கியுள்ளது.

புதுச்சேரியில் நடைபெற வுள்ள சட்டப்பேரவைத் தேர்தலில் தங்களது கட்சி மூலம் நிறுத்தப்படும் வேட்பாளர்களுக்கு உரிய விதிகளின்கீழ் சின்னம் ஒதுக்கக் கோரியிருந்த மக்கள் நீதி மய்யம் போன்ற பதிவு செய்யப்பட்ட அங்கீகரிக்கப்படாத அரசியல் கட்சியின் மனு தேர்தல் ஆணையத்தால் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளதால் இச்சின்னம் ஒதுக்கப்பட்டுள்ளதாக தெரிகிறது.

# அதிகரிக்கும் 'டீப்ஃபேக்': வலுவான ஒழுங்குமுறை அவசியம் – மத்திய அமைச்சர் அஸ்வினி வைஷ்ணவ்

**புதுடெல்லி, பிப்.19:**

'டீப்ஃபேக்' எனப்படும் போலி சித்தரிப்புகள் அதிகரித்து வருகின்றன; இப்பிரச்னையில் இருந்து குழந்தைகள் உள்பட நமது சமூகத்தைப் பாதுகாக்க வலுவான ஒழுங்குமுறை அவசியம் என்று மத்திய தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சா அஸ்வினி வைஷ்ணவ் தெரிவித்தார்.



ஏற்கெனவே உள்ள பாதுகாப்பு அம்சங்களுடன் கூடுதல் கட்டுப்பாடுகளை விதிப்பது குறித்து மத்திய அரசுத் தரப்பில் துறைசார் ஆலோசனைகள் தொடங்கப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார். டில்லியில் நடைபெற்றுவரும் சர்வதேச செயற்கை நுண்ணறிவு தாக்கம் உச்சிமாநாட்டையொட்டி, செய்தியாளர்களுக்கு செவ்வாய்க்கிழமை அளித்த பேட்டியில் மத்திய அமைச்சா அஸ்வினி வைஷ்ணவ் கூறியதாவது:

டீப்ஃபேக் பிரச்னை நாளுக்கு நாள் அதிகரித்து வரும் நிலையில், அதன் பாதிப்புகளில் இருந்து குழந்தைகள் மற்றும் சமூகத்தைப் பாதுகாக்க வேண்டியது அவசியம். இப்பிரச்னையை எதிர்கொள்ள மிக வலுவான ஒழுங்குமுறை தேவை. இந்த விவகாரத்தில், நாடாளுமன்ற நிலைக் குழுவும் விரிவாக ஆய்வு மேற்கொண்டுள்ளது. டீப்ஃபேக் மீதான கட்டுப்பாடுகளில் நாடாளுமன்றத்திலும் ஒருமித்த கருத்தை ஏற்படுத்துவது அவசியம்.

டீப்ஃபேக் பிரச்னையை எதிர்கொள்ளவும், வயது அடிப்படையிலான கட்டுப்பாடுகளை விதிப்பது குறித்தும் மிகவும் பொருத்தமான வழிமுறையில் தீர்வுகாண்பதற்காக சமூக ஊடக நிறுவனங்களுடன் மத்திய அரசு விவாதித்து வருகிறது.

நெட்ஃபிளிக்ஸ், யூ-டியூப், எக்ஸ் என எந்தவொரு நிறுவனமாக இருந்தாலும், நமது சட்ட அமைப்புமுறை மற்றும் அரசமைப்புச் சட்டத்துக்கு கட்டுப்பட்டதாகும்.

சமூக ஊடக உள்ளடக்கங்களில் வயது அடிப்படையிலான கட்டுப்பாடுகளின் அவசியத்தை பல்வேறு நாடுகளும் ஏற்றுக் கொண்டுள்ளன. இந்த விஷயத்தில், இந்தியா தனது முன்முயற்சியை ஏற்கெனவே தொடங்கியுள்ளத என்றார்..

# முதுநிலை நீட் கட்-ஆஃப் குறைப்பால் கலந்தாய்வுக்குக் கூடுதலாக 95,913 பேர் தகுதி: உச்சநீதிமன்றத்தில் தகவல்

**புதுடெல்லி, பிப்.19:**

முதுநிலை மருத்துவப் படிப்புக்கான நீட் கட்-ஆஃப் மதிப்பெண் விகிதத்தை (பாசென்டைல்) குறைத்ததால், கூடுதலாக 95,913 தேர்வர்கள் முதுநிலை நீட் கலந்தாய்வில் பங்கேற்க தகுதி பெற்றுள்ளனர் என்று உச்சநீதிமன்றத்தில் தேசிய மருத்துவத் தேர்வுகள் வாரியம் (என்பிஇஎம்எஸ்) தெரிவித்துள்ளது.

2025-26-ஆம் ஆண்டுக்கான முதுநிலை மருத்துவப் படிப்பு சேர்க்கைக்கு நீட் (தேசிய தகுதிகாண் நுழைவுத் தேர்வு) கட்-ஆஃப் மதிப்பெண் விகிதம் குறைக்கப்பட்டதற்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட மனுக்களை, அண்மையில் உச்சநீதிமன்றம் விசாரித்தது.

அப்போது கட்-ஆஃப் மதிப்பெண் விகிதம் குறைக்கப்பட்டதற்கான காரணம் குறித்து விளக்கம் அளிக்குமாறு மத்திய அரசு மற்றும் என்பிஇஎம்எஸ்ஸுக்கு உச்சநீதிமன்றம் உத்தரவிட்டது.

இதையடுத்து உச்சநீதிமன்றத்தில் என்பிஇஎம்எஸ் தாக்கல் செய்துள்ள பிரமாண பத்திரத்தில், 'முதுநிலை நீட் கட்-ஆப் மதிப்பெண் விகிதத்தை குறைக்கும் முடிவு மத்திய சுகாதார அமைச்சகத்தின் சுகாதார சேவைகள் இயக்குநரகம், தேசிய மருத்துவ ஆணையத்தின் அதிகாரத்துக்குட்பட்டதாகும். அதில் என்பிஇஎம்எஸ்ஸுக்கு எந்தப் பங்கும் இல்லை.

கட்-ஆஃப் மதிப்பெண் விகிதத்தை குறைத்ததால், கூடுதலாக 95,913 தேர்வர்கள் முதுநிலை நீட் கலந்தாய்வில் பங்கேற்க தகுதி பெற்றுள்ளனர். எனவே அவர்களின் தரப்பை கேட்காமல் உச்சநீதிமன்றம் எடுக்கும் எந்தவொரு முடிவும், அந்தத் தேர்வர்களைப் பாதிக்கும்' என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

# சட்டம் ஒழுங்கு பிரச்னை: ஒரு மாதத்திற்கு வளாகத்தில் போராட்டங்களுக்கு தடை விதித்தது டில்லி பல்கலை

**புதுடெல்லி, பிப்.19:**

டில்லி பல்கலைக்கழகத்தின் நிர்வாக அதிகாரி அலுவலகம் பிப்ரவரி 17ஆம் தேதியிட்ட உத்தரவில் தெரிவிக்கையில், கட்டுப்பாடற்ற பொதுக் கூட்டங்கள் அதிகரித்து சட்டம்-ஒழுங்கைப் பாதிக்கக்கூடும் என்ற தகவல்களைத் தொடர்ந்து இந்த கட்டுப்பாடு விதிக்கப்பட்டுள்ளது.

சிவில் லைன்ஸ் காவல் உதவி ஆணையரின் முன் உத்தரவு இருப்பதால், பொதுக் கூட்டங்கள், தீப்பந்தங்கள் அல்லது அதுபோன்ற பொருள்களை எடுத்துச் செல்வது, கோஷங்கள் எழுப்புதல் மற்றும் பொது அமைதி அல்லது போக்குவரத்து ஓட்டத்தை பாதிக்கக்கூடிய பேச்சுக்கள் ஆகியவை தடைசெய்யப்படுகிறது.

கடந்த காலங்களில், ஏற்பாட்டாளர்கள் பெரும்பாலும் இதுபோன்ற போராட்டங்களைக் கட்டுப்படுத்தத் தவறிவிட்டனர். இதுபோராட்டத்தை அதிகரித்து பரவச்செய்தது. இதன் விளைவாக பல்கலைக்கழக வளாகத்திற்குள் சட்டம் ஒழுங்கு மோசமடைந்தது. ஐந்து அல்லது அதற்கு மேற்பட்ட நபர்கள் கூடி, கோஷங்கள் எழுப்புவதும், உரை நிகழ்த்துவதும், மஷால், பீக்கன்கள், தீப்பந்தங்கள் போன்ற ஆபத்தான பொருட்களை எடுத்துச் செல்வதும் தடைசெய்யப்பட்டுள்ளது. இத்தடை உடனடியாக அமலுக்கு வருகிறது. முன்கூட்டியே திரும்பப் பெறப்படாவிட்டால் ஒரு மாதத்திற்கு அமலில் இருக்கும் என்று அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# எச் 125 ஹெலிகாப்டர் தயாரிப்பால் பாதுகாப்புத் துறை ஏற்றுமதி அதிகரிக்கும்: ராஜ்நாத் சிங்

**பெங்களூரு, பிப்.19:**

எச் 125 ஹெலிகாப்டர் தயாரிப்பால் புதிய வேலை வாய்ப்புகள் உருவாகும், பாதுகாப்புத் துறை ஏற்றுமதி அதிகரிக்கும் என பாதுகாப்புத் துறை அமைச்சர் ராஜ்நாத் சிங் (பிப். 17) தெரிவித்தார்.

கர்நாடகத்தின் வெமகல் பகுதியில் டாடா குழுமத்தின் டாடா அட்வான்ஸ்டு சிஸ்டம் லிமிடெட் மற்றும் ஏர்பஸ் இணைந்துதயாரிக்கும், எச் 125 ஹெலிகாப்டர் உற்பத்தியின் இறுதி அசெம்ளியை பிரதமர் நரேந்திர மோடியும் பிரான்ஸ் அதிபர் இமானுவல் மேக்ரானும் இணைந்து தொடக்கி வைத்தனர்.

இந்த எச் 125 ஹெலிகாப்டர், பொது பாதுகாப்பு மற்றும் ராணுவத்தில் இலகு ரக ஹெலிகாப்டர்களின் தேவையை பூர்த்தி செய்யும். எவரெஸ்ட் சிகரங்களில் ராணுவ நடவடிக்கைகளின்போது எச் 125 ஹெலிகாப்டர்கள் பயன்படுத்தப்படும்.

டாடாவும் ஏர்பஸும் இணைந்து ராணுவ நடவடிக்கைகளுக்கான பிரத்யேகமாக எச் 125எம் என்ற இலகுரக ஹெலிகாப்டர்களை தயாரித்து வருகிறது. இவை எச் 125 ஹெலிகாப்டர்களில் இருந்து சற்று மாறுபட்டதாக ராணுவ சூழல்களுக்கு ஏற்றதாக இருக்கும்.

கர்நாடகத்தில் எச் 125 ஹெலிகாப்டர் தயாரிப்பை பிரதமர் நரேந்திர மோடியும் பிரான்ஸ் அதிபர் இமானுவல் மேக்ரானும் இணைந்து மும்பையில் இருந்தவாரு காணொலி வாயிலாகத் தொடக்கி வைத்தனர்.

பாதுகாப்புத் துறை அமைச்சர் ராஜ்நாத் சிங் மற்றும் பிரான்ஸ் பாதுகாப்புத் துறைகேத்தரின் வௌட்ரினும் கர்நாடகத்தில் நடந்த தொடக்க விழா நிகழ்ச்சியில் கலந்துகொணடனர்.

நிகழ்ச்சியில் ராஜ்நாத் சிங் பேசியதாவது:

"எச் 125 ஹெலிகாப்டர் தயாரிப்புக்கான முதலீடு ரூ. 1000 கோடியைத் தாண்டும் என எதிர்பார்க்கப்படுகிறது. திறன் வாய்ந்த இளம் தலைமுறையினருக்காக நேரடி மற்றும் மறைமுகமான வேலைவாய்ப்புகளை உருவாக்கும். தற்போது எச் 125 ஹெலிகாப்டர் தயாரிப்பானது, பாதுகாப்புத் துறை ஏற்றுமதியை புதிய மைல்கல்லை நோக்கி எடுத்துச் செல்லும் என்றார்.

# மணிக்கு 120 கி.மீ. வேகம்! நாட்டின் அதிவேக சேவையாக மாறும் மீரட் மெட்ரோ

**மீரட், பிப்.19:**

வரவிருக்கும் மீரட் மெட்ரோ நாட்டின் அதிவேக மெட்ரோ சேவையாக மாறும். அதிகபட்ச செயல்பாட்டு வேகம் மணிக்கு 120 கிமீ ஆகும். இது நகரம் முழுவதும் பயண நேரத்தை கணிசமாகக் குறைக்கும் என்று அதிகாரி ஒருவா தெரிவித்தாா.

மீரட் தெற்கு மற்றும் மோடிபுரம் இடையேயான 21 கி.மீ. வழித்தடத்தில் 12 நிலையங்களுடன் இந்த சேவை செயல்படும். அனைத்து நிலையங்களிலும் நிறுத்தங்கள் உள்பட சுமாா 30 நிமிடங்களில் முழுப் பகுதியையும் பயண நேரம் உள்ளடக்கும். இந்தியாவில் முதன்முறையாக, மீரட் மெட்ரோ பகுதியளவுஅதிவேக நமோ பாரத் ரயில்களைப் போலவே அதே தண்டவாளங்கள் மற்றும் உள்கட்டமைப்பில் இயங்கும். இது பிராந்திய விரைவு போக்குவரத்தை நகர மெட்ரோ சேவைகளுடன் இணைக்கும் ஒருங்கிணைந்த போக்குவரத்து மாதிரியை உருவாக்கும் என்று அதிகாரி ஒருவா் திங்களன்று தெரிவித்தாா.

இதுகுறித்து அந்த அதிகாரி மேலும் கூறியதாவது மெட்ரோவில் இலகுரக வடிவமைப்பு மற்றும் தனித்துவமான ஒளிரும் பச்சை, நீலம் மற்றும் ஆரஞ்சு வண்ணத் திட்டம் கொண்ட நவீன துருப்பிடிக்காத எஃகு ரயில் பெட்டிகள் இடம்பெறும்.

# சத்தீஷ்கார்: 22 நக்சலைட்டுகள் போலீசில் சரண்

**ராய்ப்பூர், பிப்.19:**

சத்தீஷ்கார், மராட்டியம், ஜார்க்கண்ட், ஒடிசா, மத்தியபிரதேசம், தெலுங்கானா, ஆந்திரா உள்பட பல்வேறு மாநிலங்களில் நக்சலைட்டுகள், மாவோயிஸ்டுகள் ஆதிக்கம் உள்ளது. இந்த நக்சலைட்டுகள், மாவோயிஸ்டுகளை ஒடுக்கும் நடவடிக்கையில் மாநில சிறப்பு தனிப்படை போலீசாருடன் இணைந்து மத்திய ரிசர்வ் போலீசாரும் ஈடுபட்டு வருகின்றனர். அதேவேளை, அடுத்த மாதம் 31ம் தேதிக்குள் நாட்டில் நக்சலைட்டுகள், மாவோயிஸ்டுகளை முழுவதும் ஒழிக்க மத்திய அரசு காலக்கெடு நிர்ணயித்துள்ளது. இதையடுத்து, மாவோயிஸ்டுகள், நக்சலைட்டுகள் சுட்டுக்கொல்லப்பட்டோ, சரண் அடைந்தோ வருகின்றனர்.

இந்நிலையில், சத்திஷ்கார் மாநிலம் சுக்மா மாவட்டத்தை சேர்ந்த 22 நக்சலைட்டுகள் இன்று ஆயுதங்களை கைவிட்டு போலீசில் சரணடைந்தனர். சரணடைந்த நக்சலைட்டுகள் மறுவாழ்விற்காக தலா ரூ. 50 ஆயிரம் வழங்கப்பட்டும் என்றும் மேலும், மறுவாழ்விற்கு தேவையான உதவிகள் வழங்கப்படும் என்றும் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

# மிகப்பெரிய ஏஐ தரவு மையம் அமைக்கிறது டிசிஎஸ்

**மும்பை, பிப்.19:**

இந்தியாவில் உலகின் மிகப்பெரிய செயற்கை நுண்ணறிவு (ஏஐ) தரவு மையத்தை அமைக்க டிசிஎஸ் நிறுவனம் திட்டமிட்டுள்ளது. டெல்லியில் நடைபெற்ற ஏஐ தாக்க உச்சி மாநாட்டில் இதுகுறித்த அறிவிப்பை டிசிஎஸ் வெளியிட்டது. வணிக நிறுவனங்கள், அரசு அமைப்புகள் மற்றும் தொழில்நுட்ப நிறுவனங்கள் ஏஐ தொழில்நுட்பத்துக்கு பெருமளவில் மாறி வருவதால் வலுவான தரவு உள்கட்டமைப்பு இப்போது மிகவும் அவசியமானதாக மாறி உள்ளது. தற்போது இந்தியாவின் தரவு மையத் திறன் 1.5 ஜிகா வாட்டாக உள்ளது. இது வரும் 2030-க்குள் 10 ஜிகாவாட்டுக்கும் அதிகமாக உயரும் என எதிர்பார்க்கப்படுகிறது.

# சத்தீஸ்கர் மாநிலத்தில் நக்சலைட் நினைவிடங்களை தகர்த்து வரும் சிஆர்பிஎப்

**ராய்ப்பூர், பிப்.19:**

மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷா 2026-ம் ஆண்டு மார்ச் 31-ம் தேதிக்குள் நாட்டில் நக்சல் தீவிர வாதத்தை முற்றிலும் அகற்ற இலக்கு நிர்ணயித்துள்ளார். இதில் குறிப்பிடத்தக்க வெற்றியை அரசு பெற்றுள்ளது.

கடந்த 2019-ல் சத்தீஸ்கர், ஜார்க்கண்ட் உள்ளிட்ட மாநிலங்களில் 61 மாவட்டங்களில் நக்சலைட் வன்முறை பதிவானது. இது இந்த ஆண்டு ஜனவரியில் சத்தீஸ்கர் மற்றும் ஜார்க்கண்டில் 5 மாவட்டங்களாக சுருங்கியுள்ளது.

சரண் அடையும் நக்சலைட்களுக்கான மறுவாழ்வு கொள்கையும் பலன் அளித்து வருவதால் நக்சலிஸம் இல்லாத நிலையை நோக்கி நாடு நகர்ந்து வருகிறது. இந்நிலையில் நக்சலைட்களுக்கு எதிரான போரில் தற்போது நக்சலைட் நினைவிடங்களை சிஆர்பிஎப் இடித்து அகற்றி வருகிறது. இந்த நினைவிடங்கள் பெரும்பாலும் உயிரிழந்த நக்சலைட் தலைவர்கள் மற்றும் கமாண்டர்களுக்காக கட்டப்பட்டவை. இதுகுறித்து சிஆர்பிஎப் வட்டாரங்கள் கூறுகையில், "நக்சல் எதிர்ப்பு நடவடிக்கைகள் குறித்து ராய்ப்பூரில் கடந்த பிப்ரவரி 8-ம் தேதி மத்திய அமைச்சர் அமித் ஷா மறு ஆய்வு செய்தார். அப்போது அவரது வழிகாட்டுதலுக்கு இணங்க சத்தீஸ்கரில் கடந்த 15 நாட்களில் சுக்மா, பிஜாப்பூர் மற்றும் பஸ்தார் முழுவதும் 53 நினைவிடங்களை சிஆர்பிஎப் இடித்து அகற்றியுள்ளது. உள்ளூர் மக்கள் உதவியுடன் பிப்ரவரி இறுதிக்குள் அனைத்து நினைவிடங்களையும் இடிக்க சிஆர்பிஎப் இலக்கு நிர் ணயித்துள்ளது. மக்கள் மத்தியில் அச்சத்தை போக்கி நக்சல் போராட்டத்துக்கான அடையாளத்தை அழிக்க இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது" என்று தெரிவித்தன.

# பெங்களூருவில் ரூ.21.5 கோடி போதைப் பொருட்கள் பறிமுதல்: 3 வெளிநாட்டினர் உட்பட 15 பேர் கைது



**பெங்களூரு, பிப்.19:**

பெங்களூரு மாநகர காவல் ஆணையர் சீமந்த் குமார் சிங் நேற்று செய்தியாளர்களிடம் கூறியதாவது: பெங்களூரு மத்திய குற்றப்பிரிவு போலீஸார் போதைப்பொருள் தடுப்புப் பிரிவினருடன் இணைந்து அம்ருதஹள்ளி, ஹெப் பகுடி, ஜே.பி.நகர், கே.ஜி.ஹள்ளி உள்ளிட்ட இடங்களில் போதைப்பொருள் கடத்தலைத் தடுக்கும் பணியில் ஈடுபட்டனர். அதில் 9.46 கிலோ ஹைட்ரோ கஞ்சா, 34 கிலோ கஞ்சா, 5.67 கிலோ எம்டிஎம்ஏ, 131 கிராம் கோகைன், 29 எல்எஸ்டி மாத்திரைகள், 27 கிராம் எல்எஸ்டி கட்டிகள், 462 மில்லி ஹாஷிஷ் எண்ணெய் உள்ளிட்ட போதைப் பொருட்கள் சிக்கின.

கடத்தல்காரர்களிடம் இருந்து 2 கார், 3 இரு சக்கர வாகனம், 6 செல்போன்கள், ரூ.24 ஆயிரத்து 500 ஆகியவை பறிமுதல் செய்யப்பட்டன. கடத்தலில் ஈடுபட்ட 15 பேர் கைது செய்யப்பட்டனர். அதில் 3 பேர் வெளிநாட்டினர். 15 பேர் மீதும் போதைப் பொருள் தடுப்பு சட்ட பிரிவுகளின் கீழ் வழக்குப்பதிவு செய்யப்பட்டுள்ளது. பறிமுதல் செய்யப்பட்ட போதைப் பொருட்களின் சந்தை மதிப்பு ரூ.21.5 கோடி என மதிப்பிடப்பட்டுள்ளது.

முதற்கட்ட விசாரணையில், கல்லூரி மாணவர்கள் மற்றும் தகவல் தொழில்நுட்ப ஊழியர்களுக்கு விற்பனை செய்வதற்காக வெளிநாட்டில் இருந்து இவற்றை வாங்கியது தெரியவந்துள்ளது. இவ்வாறு அவர் தெரிவித்தார்.




## சென்னை | வேறொருவரின் நிலத்தைக் காட்டி ரூ.15 லட்சம் மோசடி செய்த நிலத்தரகர் கைது



**சென்னை, பிப்.19:** வீட்டு மனையை விற்பதாக வேறொருவரின் நிலத்தை காட்டி ரூ.15 லட்சம் பண மோசடி செய்த நிலபுரோக்கர் கைது செய்யப்பட்டார். சென்னை, சாலிகிராமம், பொன்னியம்மன் கோவில் தெருவைச் சேர்ந்தவர் பாலச்சந்தர் (45).

இவரது நண்பர் மூலம், காஞ்சிபுரம் மாவட்டம், உத்திரமேரூர் அருகே உள்ள எலப்பாக்கத்தைச் சேர்ந்த பாஸ்கரன் (51) என்பவர் கடந்தாண்டு அறிமுகமானார். நிலத்தரகரான பாஸ்கரன், பாலச்சந்தரிடம் தனக்கு எலப்பாக்கத்தில் 2 வீட்டு மனைகள் இருப்பதாகவும், அதை விற்க உள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.


இதை நம்பிய பாலச்சந்தர், அந்த வீட்டு மனைகளை வாங்க விருப்பம் தெரிவித்துள்ளார். இதையடுத்து, இருவரும் பேசி, அந்த வீட்டுமனைகளுக்கு ரூ.15 லட்சம் விலை நிர்ணயம் செய்துள்ளனர். இழுத்தடிப்பு இதையடுத்து, பாலச்சந்தர், பாஸ்கரனிடம் ரூ.15 லட்சத்தை கொடுத்தார்.

ஆனால், பாஸ்கரன், அந்த வீட்டு மனைகளை பத்திரப் பதிவு செய்து கொடுக்காமல் இழுத்தடித்து வந்துள்ளார். இதனால், சந்தேகமடைந்த பாலச்சந்தர், அந்த வீட்டுமனைகளின் ஆவணங்களை சரி பார்த்தார்.

அப்போது, அந்த வீட்டு மனைகள் பாஸ்கரனுக்கு சொந்தமானது இல்லை என்பதும், அடுத்தவருக்கு சொந்தமான நிலத்தை காட்டி தன்னிடம் ரூ.15 லட்சத்தை பாஸ்கரன் மோசடி செய்திருப்பதையும் அறிந்து அதிர்ச்சியடைந்தார்.

இதுதொடர்பாக, விருகம்பாக்கம் காவல் நிலையத்தில் பாலச்சந்தர் புகார் அளித்தார். அதன்படி, போலீஸார் வழக்குப் பதிந்து பாஸ்கரனை கைது செய்தனர்.

## பெட்டிக்கடைக்காரர் கொலை வழக்கில் 21 பேருக்கு ஆயுள் தண்டனை



**சென்னை, பிப்.19:** விழுப்புரம் மாவட்டம் கிளியனூர் பஞ்சாயத்து தலைவர் பதவிக்கான தேர்தல் முன்விரோதத்தில் பெட்டிக்கடைக்காரரை கொலை செய்த வழக்கில் விடுவிக்கப்பட்ட, முன்னாள் பஞ்சாயத்து தலைவி மற்றும் அவரது மகன்கள் உள்ளிட்ட 21 பேருக்கு உயர் நீதிமன்றம் ஆயுள் தண்டனை விதித்துள்ளது.

கிளியனூர் அருகேயுள்ள காட்ராம்பாக்கத்தைச் சேர்ந்த முன்னாள் பஞ்சாயத்து தலைவர்களான கிருஷ்ணவேணி தரப்புக்கும், வில்வமணி தரப்புக்குமிடையே தேர்தல் முன்விரோதம் இருந்துள்ளது. இந்நிலையில், அங்கு பெட்டிக்கடை நடத்தி வந்த பாஸ்கர் என்பவர், வில்வமணிக்கு ஆதரவாக வேலை செய்துள்ளார்.

ஆனால், தேர்தலில் கிருஷ்ணவேணி வெற்றி பெற்று, மீண்டும் பஞ்சாயத்து தலைவராக பதவியேற்றார். 2013 மே 29-ம் தேதி வில்வமணி தலைமையில், கிராமத்தில் உள்ள கோயிலில் பாஸ்கர் திருவிழாவை நடத்தி உள்ளார்.

இதில் ஆத்திரமடைந்த கிருஷ்ணவேணி மற்றும் அவரது மகன்கள் மதன்ராஜ், மதன்குமார் மற்றும் உறவினர்கள் காத்தமுத்து, பார்த்திபன், ராணி, மூர்த்தி என்ற கிருஷ்ணமூர்த்தி, மாரிமுத்து, சுரேஷ், ஜெயராஜ், குமார், முரளி, தாஸ் என்ற சிவப்பிரகாசம், ஜனார்த்தனன், சிவக்குமார், ஜெயசேகர், வீரமணி, வேலு, ஜெயகாந்தன், வினோத்குமார், கருணாநிதி, ஞானசேகரன், ராமதாஸ் ஆகிய 23 பேரும், திருவிழா முடிந்து வீட்டில் இருந்த பாஸ்கரை கத்தியால் குத்தியும், இரும்பு கம்பியால் தாக்கியும் கொலை செய்துள்ளனர்.

இதுதொடர்பாக கிளியனூர் போலீஸார் விசாரணை நடத்தி, கிருஷ்ணவேணி உள்ளிட்ட 23 பேரையும் கைது செய்தனர். இந்த வழக்கை விசாரித்த திண்டிவனம் கூடுதல் அமர்வு நீதிமன்றம், கொலைக் குற்றம் நிரூபிக்கப் படவில்லை என்று கூறி, 2017-ல் 23 பேரையும் விடுவித்தது.

இதை எதிர்த்து அமுதா சென்னை உயர் நீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்தார். இந்த வழக்கு விசாரணை நீதிபதிகள் பி.வேல்முருகன், எம்.ஜோதிராமன் அமர்வில் நடந்தது.

காவல் துறை தரப்பில் கூடுதல் குற்றவியல் வழக்கறிஞர் ஏ.தாமோதரன் ஆஜரானார்.மேல்முறையீட்டு மனுதாரரான அமுதா தரப்பில் ஆஜரான வழக்கறிஞர் எஸ். சுரேஷ், இந்த கொலையில் ஈடுபட்டது தாங்கள்தான் என கிருஷ்ணவேணி மகன்களே முன்வந்து வாக்குமூலம் அளித்துள்ளனர்.

இந்தக் கொலை மனுதாரரின் எதிரிலேயே நடந்துள்ளது. அவரும் சாட்சியம் அளித்துள்ளார். ஆனால், வழக்கில் இருந்து அனைவரும் விடுதலை செய்யப் பட்டனர்" என்றார். இருதரப்பு வாதங்களையும் கேட்ட நீதிபதிகள், இந்த வழக்கில் குற்றம் சாட்டப்பட்ட அனைவரையும் குற்றவாளிகள் என்று தீர்மானித்து, திண்டிவனம் அமர்வு நீதிமன்றத் தீர்ப்பை ரத்து செய்தனர்.

மேலும், குற்றம் சாட்டப்பட்டவர்களில் குமார் மற்றும் ஞானசேகரன் ஆகியோர் இறந்துவிட்டதால், அவர்கள் மீதான வழக்கு கைவிடப்பட்டதாகவும், மீதமுள்ள கிருஷ்ணவேணி மற்றும் அவரது மகன்கள் உள்ளிட்ட 21 பேருக்கு ஆயுள் தண்டனை மற்றும் தலா ரூ.1,000 அபராதம் விதித்து தீர்ப்பளித்தனர். மேலும், மேல்முறையீடு செய்ய ஏதுவாக, தண்டனையை நிறுத்தி வைத்தும் நீதிபதிகள் உத்தரவிட்டனர்.

# கடற்கரை - தாம்பரம் மார்க்கத்தில் 45 நாட்களுக்கு மின்சார ரயில் சேவையில் மாற்றம்: 44 ரயில் சேவைகள் ரத்து

**சென்னை, பிப்.19:** எழும்பூர் ரயில் நிலைய மறுசீரமைப்பு பணி காரணமாக, சென்னை கடற்கரை - தாம்பரம், செங்கல்பட்டு மார்க்கத்தில் மின்சார ரயில்களின் சேவையில் கடந்த 5-ம் தேதி முதல் வரும் ஏப்.5-ம் தேதி வரை 45 நாட்களுக்கு சுமார் 44 ரயில் சேவைகள் ரத்து செய்யப்பட உள்ளன.



இதுகுறித்து, தெற்கு ரயில்வேயின் சென்னை கோட்ட மேலாளர் சைலேந்திர சிங் நேற்று கூறியதாவது: சென்னை எழும்பூர் ரயில் நிலையத்தில் மேற்கொள்ளப்படும் மறுசீரமைப்பு பணிகள் காரணமாக, நடைமேடை 10 மற்றும் 11-ல் இருந்து இயக்கப்படும் புறநகர் மின்சார ரயில்கள் வரும் 20-ம் தேதி நள்ளிரவு முதல் ஏப். 5-ம் தேதி நள்ளிரவு வரை நடைமேடை 5 மற்றும் 6-ல் இருந்து இயக்கப்படும்.

தற்காலிக அட்டவணை: சென்னை கடற்கரையில் இருந்து தாம்பரம் மற்றும் செங்கல்பட்டுக்கு இயக்கப்படும் புறநகர் மின்சார விரைவு ரயில்கள் 6-வது நடைமேடையிலும், செங்கல்பட்டு, தாம்பரத்தில் இருந்து கடற்கரை வரை இயக்கப்படும் மின்சார ரயில்கள் 5-வது நடைமேடையிலும் இயக்கப்படும். இந்த 45 நாட்களிலும் தற்காலிக அட்டவணைப்படி மட்டுமே மின்சார ரயில்கள் இயக்கப்படும்.

புதிய எண்கள் மற்றும் கால அட்டவணையுடன் 160 மின்சார ரயில்கள் இயக்கப்படும். 80 ரயில்கள் சென்னை கடற்கரையில் இருந்தும், 80 ரயில்கள் செங்கல்பட்டு, தாம்பரத்தில் இருந்தும் இரு மார்க்கமும் இயக்கப்படவுள்ளன.

மார்ச் இறுதியில்.. வேளச்சேரி- பரங்கிமலை பறக்கும் ரயில் தடத்தில் பாதுகாப்பு சோதனை முடிந்த பிறகு, மார்ச் இறுதியில் ரயில் சேவை தொடங்கும். கிளாம்பாக்கம் ரயில் நிலையம் பொது மக்களின் பயன்பாட்டுக்கு விரைவில் திறக்கப்படும். இவ்வாறு அவர் கூறினார்.

ரயில்கள் ரத்து செய்வது குறித்து, ரயில்வே அதிகாரிகள் கூறியதாவது: புறநகர் மின்சார ரயில் சேவைகளின் புதிய அட்டவணையின்படி, தற்போது இயக்கப்படும் 204 ரயில் சேவைகளுக்குப் பதிலாக மொத்தம் 160 ரயில் சேவைகள் இருமார்க்கமாக இயக்கப்படும்.

செங்கல்பட்டு மற்றும் தாம்பரம் முதல் கடற்கரை வரை மொத்தம் 67 ரயில் சேவைகள் இயக்கப்படும். எழும்பூர் நிலையத்திலேயே 11 ரயில் சேவைகள் நிறுத்தப்படும். புறநகர் சேவைகள் குறைக்கப்பட்டதால் பாதிக்கப்பட்ட பயணிகளுக்கு உதவும் வகையில், தெற்குரயில்வே, சிறப்பு சேவைகளை இயக்க பெருநகர போக்குவரத்துக் கழகத்திடம் கோரிக்கை விடுக்கப்பட உள்ளது. இவ்வாறு அவர்கள் கூறினர்.

# சென்னை மெரினாவில் Rope Way Car அமைக்கப்படும்- மேயர் பிரியா





**சென்னை, பிப்.19:** சென்னை மெரிாவில் கலங்கரை விளக்கம் முதல் அண்ணா நினைவிடம் வரை ரோப் வே கார் வழித்தடம் அமைக்கப்படும் என்று சென்னை மாநகராட்சி நிதிநிலை அறிக்கையில் மேயர் பிரியா அறிவித்துள்ளார்.

மேலும் கூறிய அவர்,"சென்னை மாநகராட்சி பூங்காக்களில் மரங்கள் மூலம் பிராணவாயு உற்பத்தி செய்ய ஏதுவாக பசுமை சென்னை திட்டம் அறிமுகம் செய்யப்படும்.

பொதுமக்கள் பங்கேற்கும் சென்னை திட்டம் ரூ.10 கோடி மதிப்பீட்டில் அறிமுகம் செய்யப்படும்.

சென்னை பக்கிங்காம் கால்வாய் வழித்தடத்தில் நகர்ப்புற பசுமையாக்கள் திட்டம் ரூ.45 கோடியில் மேம்படுத்தப்படும்.

சென்னையில் அண்ணா நகர், தி.நகர், நுங்கம்பாக்கம், அடையாறு போன்ற இடங்களில் மின் வாகன மின்னேற்ற நிலையம் அமைக்கப்படும்" என்றார்.

# பெண்கள் பெயரில் சொத்து பதிவு செய்தால் சலுகை: 3.71 லட்சம் பேர் பயன்



**சென்னை, பிப்.19:** தமிழகத்தில் பெண்கள் பெயரில் சொத்து வாங்கினால் ஒரு சதவீத பதிவுக் கட்டணம் குறைப்பு என்ற அரசின் சலுகையால் இதுவரை 3.71 லட்சம் பேர் பயனடைந்துள்ளனா.

நிதிநிலை அறிக்கையில் கூறியிருப்பதாவது: பெண்கள் பெயரில் பதிவு செய்யப்படும் ரூ.10 லட்சம் வரை மதிப்புள்ள வீடுகள், மனைகள் மற்றும் விவசாய நிலங்கள் உள்ளிட்ட அசையா சொத்துகளுக்கு கடந்த ஆண்டு ஏப்ரல் முதல் பதிவுக் கட்டணம் ஒரு சதவீதம் குறைக்கப்பட்டுள்ளது. இதன்மூலம் 3 லட்சத்து 71,705 நபாகள் இதுவரை பயனடைந்துள்ளனா. அரசின் திட்டங்கள், முயற்சிகளால் நாடு முழுவதும் உள்ள தொழிற்சாலைகளில் பணிபுரியும் பெண்களில் 41 சதவீதம் பேர் தமிழகத்தின் தொழிற்சாலைகளில் பணிபுரியும் பெண்கள் என்ற பெருமையை நமது மாநிலம் அடைந்துள்ளது.

அரசுப் பள்ளிகளில் செயல்படுத்தப்பட்டுவரும் காலை உணவுத் திட்டத்தால் பள்ளிகளுக்கு குழந்தைகளின் வருகை அதிகரித்துள்ளது. அதேபோன்று கற்றல் மேம்பட்டுள்ளது. 19.34 லட்சம் மாணவாகள் பயனடையும் இத்திட்டத்துக்காக கடந்த நான்கு ஆண்டுகளில் ரூ.1,284 கோடி செலவிடப்பட்டுள்ளது.

குழந்தைகள்,திருநங்கைகள் நலனுக்கு... பெற்றோரை இழந்த குழந்தைகளை அரவணைத்துப் பாதுகாக்கும் வகையிலும், அந்தக்குழந்தைகள் இடைநிற்றல் இன்றி 18 வயது வரை பள்ளிப் படிப்பைத் தொடரவும் மாதம் ரூ.2,000 வழங்கும் அன்புக் கரங்கள் திட்டத்தின் கீழ் இதுவரை 10,637 குழந்தைகள் பயனடைந்துள்ளனா.

திருநங்கைகள் சுயமாகத் தொழில் செய்வதை ஊக்குவிக்க இந்த அரசு மானியம் வழங்கி வருகிறது. திருநங்கைகளுக்கு அதிகாரம் அளிக்கும் வகையில் அவாகள் ஊா்க்காவல் படையில் சோ்ந்து பணி செய்திட வழிவகை செய்யப்பட்டுள்ளது.

# தாம்பரத்தில் புற்றுநோயாளிகளுக்கு மருத்துவ நல்லாதரவு மையம்: விரைவில் பயன்பாட்டுக்கு வர உள்ளதாக தகவல்

**சென்னை, பிப்.19:** தமிழக அரசு சார்பில் தாம்பரத்தில் புற்றுநோயாளிகளுக்கு அரசு நல்லாதரவு மையம் விரைவில் பயன்பாட்டுக்கு வருகிறது. தமிழகத்தில் ஆண்டுதோறும் 1 லட்சத்துக்கும் அதிகமானோருக்கு புற்றுநோய் பாதிப்பு கண்டறியப்படுகிறது.



ஆண்களைவிட பெண்களே புற்றுநோயால் அதிகம் பாதிக்கப்பட்டு வருகின்றனர். குறிப்பாக, மார்பகப் புற்றுநோய் பாதிப்பு என்பது ஒரு லட்சத்தில் 16.7 பெண்களுக்கு ஏற்படுவதாக புள்ளிவிவரங்கள் தெரிவிக்கின்றன.

அதேபோல், ஆண்களில் ஒரு லட்சத்தில் 13.6 பேர் வாய்ப் புற்று நோயால் பாதிக்கப்படுகின்றனர். தமிழக அரசு பல்வேறு விழிப்புணர்வு, தடுப்பு நடவடிக்கைகள் மேற்கொண்டாலும், புற்றுநோயை ஆரம்ப நிலையிலேயே கண்டறிவதில் சிக்கல்கள் நிலவி வருகின்றன.

புற்று நோய் பாதிப்பு தீவிரமடைந்த பிறகே பெரும்பாலானோர் சிகிச்சைக்கு செல்கின்றனர். நோயை குணப்படுத்த முடியாத நிலையில், வலி நிவாரண சிகிச்சைகள் மட்டும் வழங்கப்பட்டு வருகின்றன.

உறவினர்களால் கைவிடப்பட்டவர்களுக்கு ஆதரவு கிடைக்காத நிலை இருப்பதால், தன்னார்வ அமைப்புகள், தனியார் மருத்துவ மையங்கள் சில இடங்களில் மருத்துவ நல்லாதரவு மையங்களை தொடங்கியுள்ளன.

குடிநீர், மின்சார வசதி: தமிழக அரசு சார்பில் அது போன்ற மையங்கள் இல்லாததால், ராஜீவ்காந்தி அரசு பொது மருத்துவமனை - சென்னை மருத்துவ கல்லூரி சார்பில் மையத்தை தொடங்க நடவடிக்கை எடுக்கப்பட்டன. அதற்கான அனுமதி அரசிடம் கோரப்பட்டது.

அதனை பரிசீலித்த அரசு, தாம்பரத்தில் கரோனா காலத்தில் கட்டப்பட்ட தரை மற்றும் 2 தளங்கள் கொண்ட கட்டிடத்தை இதற்கு பயன்படுத்திக் கொள்ள ஒப்புதல் அளித்துள்ளது. அந்த இடத்தில் மின் வசதி, குடிநீர் உள்ளிட்ட கட்டமைப்புகளுக்காக ரூ.7.44 கோடியை முதலமைச்சரின் விரிவான மருத்துவ காப்பீட்டு திட்டத்தில் மேற்கொள்ள சென்னை மருத்துவ கல்லூரிக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

தாம்பரத்தில் அமையவுள்ள உள்ள புற்றுநோய் மருத்துவ நல்லாதரவு மையத்தில் 180 படுக்கை வசதிகள் ஏற்படுத்தப்படவுள்ளன. புற்றுநோயாளிகளுக்கு தேவையான வலி நிவாரண சிகிச்சை, மன நல ஆதரவு சிகிச்சை, உளவியல் ஆலோசனைகள் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அதற்கான மருத்துவர்கள், செவிலியர்கள் ராஜீவ் காந்தி அரசு பொது மருத்துவமனையில் இருந்து பணியமர்த்தப்படவுள்ளனர். தூய்மைப் பணி மற்றும் பாதுகாப்புப் பணிக்கு 45 பேரை தனியார் மூலம் ஈடுபடுத்த அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

# பெண்களுக்கான நவீன இலவச கருத்தடை சாதனம் அறிமுகம்


**மதுரை, பிப்.19:** அரசு ராஜாஜி மருத்துவமனையின் மகப்பேறு மற்றும் மகப்பேறியல் துறை சார்பாக, பெண்களுக்கான 'இம்பிளானன் என்.எக்ஸ்டி' என்ற அதிநவீன கருத்தடை சாதனம் அறிமுகப்படுத்தும் நிகழ்ச்சி நடந்தது. டீன் அருள் சுந்தரேஷ்குமார் தலைமை தாங்கினார். திட்ட இயக்குனர் ஜோஸ்பின் ஹேமா, டாக்டர்கள் சித்ராதேவி, ஜெயந்தி பிரசாத். மருத்துவ இருப்பிட அதிகாரிகள் சரவணன், முரளிதரன் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

இந்த சாதனத்தின் செயல்பாடுகள் குறித்து குடும்ப நலத்துறை துணை இயக்குனர் நடராஜன், மகப்பேறு சிகிச்சை பிரிவு தலைவர் காயத்ரி ஆகியோர் நிருபர்களிடம் கூறியதாவது:-

சென்னை, தர்மபுரி ஆகிய அரசு ஆஸ்பத்திரிகளில் இந்த அதிநவீன சாதனம் பயன்படுத்தப்பட்டு வருகிறது. இந்தநிலையில், தென் மாவட்டங்களில் முதன்முறையாக மதுரை அரசு ஆஸ்பத்திரியில் அறிமுகப்படுத்தப்பட்டு உள்ளது. இது பெண்களுக்கு மிகவும் பயன் உள்ள ஒரு சாதனம். கருத்தடை மாத்திரைகள், காப்பர்-டி போன்ற மருத்துவ முறைகளை காட்டிலும் இது பெண்களுக்கு பாதுகாப்பானது, வசதியானது.



அதிநவீன சாதனம்




கையில் பொருத்தப்பட்டுள்ள நிலையில்...

இது தீக்குச்சி போன்று 3 செ.மீ நீளம் கொண்டது. வலது கை பழக்கம் உள்ளவர்களுக்கு, இடது கையிலும், இடது கை பழக்கம் உள்ளவர்களுக்கு வலது கையிலும் இந்த சாதனம் பொருத்தப்படுகிறது. தீக்குச்சி வடிவில் இருப்பதால், தோலுக்கு அடியில் செலுத்தும்போது கையில் இருப்பது தெரியாததுபோல் இருக்கும். இதனால், எந்தவித பாதிப்பும் வராது.

இந்த அதிநவீன கருத்தடை சாதனமானது, 3 வருடத்திற்கு கர்ப்பத்தடைக்கானதாக வடிவமைக்கப்பட்டு உள்ளது. ஒருமுறை செலுத்தினால் போதும். அதில் உள்ள மருந்து தினசரி உடலில் வெளியாகி கரு உருவாதலை தடுக்கும்.

இதன் மூலம் பெண்களுக்கு 3 ஆண்டுகளுக்கு கர்ப்பத்தைத் தடுக்க முடியும். ஒரு வருடம் கழிந்த உடன் குழந்தை பெற்றுக்கொள்ள நினைத்தாலும், உடனடியாக அதனை வெளியே எடுத்துவிடலாம்.

குழந்தை பெற்று கொண்ட பெண்களுக்குதான் இது செலுத்தப்படுகிறது. இதன் மூலம் பெண்களுக்கு ரத்த சோகை பாதிப்பும் வராது. 18 வயது முதல் 45 வரை உள்ள பெண்களுக்கு இது பொருத்தப்படுகிறது. இதன் விலை ரூ.3 ஆயிரம். அரசு அஸ்பத்திரியில் உள்ள பெண் நோயாளிகளுக்கு இலவசமாக வழங்கப்படுகிறது.

உடம்பில் அந்த சாதனம் இருப்பது போன்று தெரியாது. எந்தவித தொந்தரவு, அசவுகரியமும் இருக்காது. நமது அன்றாட பணிகளை செய்ய முடியும். குறிப்பாக, இதய நோய் உள்ளிட்ட இணை நோயால் பாதிக்கப்பட்டவர்களுக்கு இந்த சாதனம் மிகவும் பயன் உள்ளதாக இருக்கும். 3 வருடங்கள் கடந்துவிட்டால், அதனை எடுத்து விட்டு புதிதாக வேறு ஒன்றை பொருத்தி கொள்ளலாம்.

இதனை நோயாளிகளுக்கு பொருத்துவது குறித்து அரசு டாக்டர்களுக்கும். தனியார் மருத்துவமனை டாக்டர்களுக்கும் அரசு ஆஸ்பத்திரியில் வைத்து சிறப்பு பயிற்சி வழங்கப்பட்டு வருகிறது. தற்போது 72 சாதனம் கையிருப்பு உள்ளது. தேவைப்படும்பட்சத்தில், கூடுதலாக அரசிடம் கேட்டு பெற்று கொள்ளப்படும்.

இவ்வாறு அவர்கள் கூறினர்.

## திருவோண நட்சத்திரம், சத்யநாராயண பூஜை சிறப்பு வழிபாடு....






கடலூர் மாவட்டம் பிப்ரவரி -18 விருத்தாச்சலம் ஸ்ரீ வாசவி கன்யகா பரமேஸ்வரி அம்மன் ஆலயத்தில் திருவோணம் நட்சத்திரத்தை முன்னிட்டு சத்தியநாராயண பூஜை வேத மந்திரங்கள் ஒலிக்க, பாட்டுகள் பாடி, பிரசாதம் நெய்வேத்தியங்களுடன் மகா தீபாரதனையும் நடைபெற்றது. பூஜைகள் வெகு சிறப்பாக நடைபெற்றது நடைபெற்றது. ஆர்ய வைஸ்ய ஆண்கள்,பெண்கள் அனைவரும் சத்யநாராயண பூஜையில் கலந்துகொண்டு சத்யநாராயண வேண்டி அருள் பெற்றனர். அனைவருக்கும் பிரசாதங்களும் வழங்கப்பட்டது.

## மானாமதுரை ஆனந்த வல்லி சோமநாதர் கோவிலில் 70 ஆண்டுகள் கழித்து புதிய தேர் வெள்ளோட்டம்

### 22 ந்தேதி நடைபெறுகிறது



**மானாமதுரை, பிப்.19:** சிவகங்கை மாவட்டம் மானாமதுரை வைகை ஆற்று கரையில் உள்ள சிவகங்கை தேவஸ்தானம் நிர்வாகத்திற்குட்பட்டபிரசித்தி பெற்ற சந்திர பகவானின் தொழுநோய் குணம் பெற்ற ஸ்தலமாக உள்ள ஶ்ரீ ஆனந்த வல்லி அம்மன் சோமநாதர் கோவி லில் புதிதாக செய்யப்பட்டுள்ள சோமநாதர் தேருக்கான வெள்ளோட்ட விழா மற்றும் தேரடி கருப்பர் மகாகும்பாபிஷேகம் வரும்22ந்தேதி ஞாயிற்றுக்கிழமை காலை நடைபெறுகிறது.

ஆனந்தவல்லி, சோமநாதர் கோவிலில் சித்திரை திருவிழாவின் போது தேரோட்டம் சிறப்பாக நடைபெறும்.70 வருடங்களுக்கு முன்பு தேரோட் டம் நடைபெறும் போது 2 பெரிய தேர்களில் தனித்த னியாக சுவாமியும், அம்மனும் நான்கு ரத வீதிகளின் வழியே வலம் வந்தனர். இதில் சோமதாதர் சுவாமி சென்ற தேர் சேத மடைந்ததை தொடர்ந்து தற்போது அம்மன் சென்ற பெரிய தேரில் சோமநாதர் சுவாமியும், அதற்குப் பின் னால் ஒரு சிறிய தேரில் அம்மனும் தேரோட்ட விழாவின்போது வீதி உலாவருகின்றனர்.

இதனைத் தொடர்ந்து சோமநாதர் சுவாமிக்கு புதிய தேர் செய்ய வேண்டுமென பக்தர்கள் கோரிக்கை விடுத்ததை தொடர்ந்து நன்கொடையாளர்கள் மற்றும் பக்தர்கள் உதவியுடன் 2 வருடங்க ளுக்கும் மேலாக புதிதாக தேர் செய்யும் பணி நடந்து முடிந்துள்ளது. மானாமதுரை ஆனந்தவல்லி, சோமநாதர் கோவில் வைரத்தேர் வெள்ளோட்ட விழாவிற்காக முகூர்த்தக்கால் கடந்த சில நாட்களுக்கு முன்பு நடைபெற்று புதிதாக உயர் ரக தேக்கு மரத்தால் செய்யப்பட்ட தேர்க்கு சோமநாதர் வைர தேர் பெயரிடப்பட்டு அலங்கரிக்கும் பணிகளும் சிறப்பு யாகசாலை அமைக்கும் பணி நடைபெற்று வருகிறது.

புதியதேரில்திருவிளையாடல் புராணம் சிற்பங்கள் அறுபத்து மூன்று நாயன்மார்கள் மர சிற்பங்களும் இடம் பெற்றுள்ளன. ஆனந்த வல்லி சோமநாதர் கோவில் கோபுரம் முன்பு நிறுத்தப்பட்டுள்ள புதிய தேரை ஏராளமான பக்தர்கள் பார்வையிட்டு வழிபாடு செய்து செல்கின்றனர்.

ஏராளமான பக்தர்கள் புதிய தேரை பார்வையிட்டு வழிபாடு செய்தனர்.

## பெண்ணாடத்தில் அரிமா சங்கம் மாதாந்திர முதல் செயற்குழு கூட்டம் மற்றும் பொதுக்குழு கூட்டம்



**கடலூர், பிப்.19:** கடலூர் மாவட்டம் பெண்ணாடத்தில் பெண்ணாடத்தில் அரிமா சங்கம் மாதாந்திர முதல் செயற்குழு கூட்டம் மற்றும் பொதுக்குழு கூட்டம் மெய்கண்டார் ஆலயத்தில் சங்கத் தலைவர் வசந்தராஜ் தலைமையில் நடைபெற்றது.

கூட்டத்தில் இதுவரை பெண்ணாடம் அரிமா சங்கம் சார்பாக 4850 சேவைகள் செய்யப்பட்டன.

கூட்டத்தில் கொடையாளர் களுக்கு நன்றிகள் தெரிவித்து தீர்மானம் நிறைவேற்றப்பட்டது . கூட்டத்தில் ஜனவரி மாதம் நடைபெற்ற சாலை பாதுகாப்பு வார விழாவில் கலந்து கொண்ட தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டு துறை அமைச்சர் கணேசன் போக்குவரத்து துறை மற்றும் மின்சார துறை அமைச்சர் சிவசங்கர் ஆகியோருக்கு நன்றி தெரிவித்து தீர்மானம் நிறைவேற்றப்பட்டது .

கூட்டத்தில் உலகப் புகழ்பெற்ற இருதய மருத்துவர் சொக்கலிங்கம், மருத்துவர் வள்ளுவன் ஆகியோர்களுக்கு நன்றி தெரிவித்து தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

கூட்டத்தில் இந்த மாதம் 27ஆம் தேதி நடைபெற உள்ள PDG நிகழ்ச்சியை பற்றி கலந்துரையாடல் பட்டது மற்றும் மார்ச் மாதம் மகளிர் தினத்தை வகைமுன்னிட்டு எவ்வாறு நிகழ்ச்சியை செய்யலாம் என்பதை பற்றியும் கருத்துகள் தெரிவிக்கப்பட்டது மற்றும் கூட்டத்தில் மற்றும் பல கருத்துக்கள் கூறப்பட்டது . நிகழ்வில் அரிமா சங்க உறுப்பினர்கள் பலர் கலந்து கொண்டனர்.



அகில இந்திய மாநில அரசு ஓய்வூதியர் சம்மேளன அகில இந்திய மாநாடு ஹரியானா மாநிலம் குருச்சேத்திராவில் பிப்ரவரி 22 23 தேதியில் நடைபெறுகிறது
அகில இந்திய மாநாட்டில் கலந்து கொள்ளும் தமிழ்நாடு பிரதிநிதிகளை மாநில பொதுச் செயலாளர் இளமாறன் சென்னை சென்ட்ரல் ரயில் நிலையத்தில் வாழ்த்தி வழியனுப்பி வைத்தார் உடன் மாநில நிர்வாகிகள் செந்தமிழ் செல்வன் மகேஸ்வரி நாதன் முனைவர் சு கிருஷ்ணன் ஆகியோர்..



மணமேல்குடி குலச்சிறையார் நர்சரி & பிரைமரி பள்ளியில் அருள்நிதி. JC. பன்னீர்செல்வம் இயற்கைநலசங்கம் மாநில அமைப்பாளர் அவர்கள் இயற்கையோடு இசைந்த வாழ்வு பற்றி மணவர்களுக்கான விழிப்புணர்வு விளக்கபயிற்சியும் விளக்க உரையும் அளித்தார். உடன் மணமேல்குடி மனவள கலை மன்ற பேராசிரியர் அழகுராஜ் அய்யா அவர்கள் கலந்து கொண்டார்.அவர்களை பள்ளி VICE PRINCIPAL திருமதி. பானுப்பிரியா MSC.,B.ED மற்றும் ஆசிரியர்கள் கௌரவப்படுத்தினர்.

## விழிப்புணர்வு பிரச்சாரம்........



மாவட்ட ஆட்சியர் வளாகத்தில் வேலை வாய்ப்பு மற்றும் பரிந்துரையின் கீழ் இயங்கும் மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையம் சார்பில் செய்யார் அறிஞர் அண்ணா அரசு கலைக் கல்லூரியில் மாபெரும் தனியார் துறை வேலைவாய்ப்பு முகாம் நடைபெறவுள்ளதை முன்னிட்டு இளைஞர்கள் மற்றும் பொது மக்களுக்கு உயர்திரு. மாவட்ட ஆட்சித் தலைவர் க. தர்ப்பகராஜ் இ.ஆ.ப அவர்கள் தகவல் தெரிவிக்கும் வகையில் விழிப்புணர்வு பிரச்சார வாகனத்தை கொடியசைத்து துவக்கி வைத்தார்.




## நாம் தமிழர் கட்சி மாநாட்டில் நான் போட்டியிடும் தொகுதியை அறிவிப்பேன்- சீமான்



**திருச்சி, பிப்.19:** திருச்சி திண்டுக்கல் ரோடு ஆலம்பட்டி புதூரில் வருகிற 21-ந்தேதி நாம் தமிழர் கட்சியின் மாநாடு நடைபெறுகிறது. இந்த மாநாட்டு பணிகளை அக்கட்சியின் ஒருங்கிணைப்பாளர் சீமான் பார்வையிட்டு நிருபர்களுக்கு பேட்டி அளித்தார். அப்போது அவர் கூறியதாவது:-

இந்த மாநாடு மாற்றத்தை விரும்பும் மக்களுக்கான மாநாடாக நடத்தப்பட உள்ளது. இது தமிழக இன அரசியல் வரலாற்றில் ஒரு பாய்ச்சலாகவும், ஒரு படிநிலை முன்னேற்றமாகவும், மாறுதலாகவும் அமையும். உயிரினங்கள் வாழ்வதற்கு ஐந்து பஞ்சபூதங்களும் அவசியம் வேண்டும். ஆனால் இன்றைக்கு உலக நாடுகள் நீரற்ற நிலமாக மாறி வருகின்றன.

தமிழ்நாட்டில் 6 மாவட்டங்களில் நிலத்தடியில் நீர் இல்லை என இந்த அரசாங்கம் சொல்கிறது. செய்தி சொல்வதற்கு இந்த அரசு தேவையில்லை. அதனை சீர் செய்வதற்கு இந்த அரசு என்ன நடவடிக்கை எடுத்துள்ளது. பீகாரில் சட்டமன்றத் தேர்தலுக்கு பின்னர் ஆறு மாவட்டங்களில் தண்ணீரில் யுரேனியம் கலந்து தாய்ப்பாலில் அது கலந்து விட்டதாக கூறியுள்ளனர்.

ஆகவே தான் நாங்கள் இந்த நிலம், நீர், மரம் போன்றவற்றின் முக்கியத்துவத்தை அடுத்த தலைமுறைக்கு எடுத்துச் சொல்லும் வகையில் மாநாடு நடத்தியுள்ளோம். நாம் வழிபடுவதற்கு இங்கு ஒரு கோடி தெய்வங்கள் உள்ளன. ஆனால் நாம் வாழ்வதற்கு ஒரே ஒரு பூமி மட்டும் தான் இருக்கிறது. வருகிற 21-ந்தேதி நடைபெறும் மாநாட்டில் நாம் தமிழர் கட்சி சார்பில் போட்டியிடும் வேட்பாளர்களை அறிமுகம் செய்ய உள்ளோம். 234 தொகுதிகளுக்கும் வேட்பாளர்கள் அறிவிக்கப்படுவார்கள். நான் போட்டியிடும் தொகுதியையும் அன்று அறிவிப்பேன்.

இடைக்கால பட்ஜெட் குறித்து கேட்கிறீர்கள். தமிழ்நாட்டில் 10¼ லட்சம் கோடி கடனை வாங்கியுள்ளார்கள். இங்கு கடன் வளர்ச்சி தான் ஏற்பட்டுள்ளது. ஆகவே தான் இந்த ஆட்சி முறையை மாற்ற வேண்டும் எனச் சொல்கிறோம்.

மற்ற கட்சிகள் மாநாடு போன்று எங்கள் மாநாடு இருக்காது. எங்கள் மாநாட்டில் தேர்தல் அறிக்கை என்பது கிடையாது. எங்கள் ஆட்சி எப்படி இருக்கப் போகிறது என்பதற்கான மாநாடாக தான் இருக்கப்போகிறது. மாற்றத்தை விரும்பும் மாநாடாக இருக்கப்போகிறது. இந்த பூமியை காக்க போவது யார் என்பதை உணர்த்துவதற்கான மாநாடாக இருக்கப் போகிறது.

அன்று முதல் எங்கள் தேர்தல் பயணத்தை தொடங்க போகிறோம். தமிழகத்தில் கடுமையான நிதி நெருக்கடி இருக்கும்போது ஒரே நாளில் ரூ.6,500 கோடி நிதி ஒதுக்கி மகளிர் உரிமை தொகை மற்றும் கூடுதலாக கோடைகால தொகை கொடுத்தது மிக பெரிய கொடுமையாக பார்க்கிறேன். தமிழகத்தில் கடுமையான பொருளாதார நெருக்கடி வரப்போகிறது. மக்கள் சந்திப்பு பயணத்தை தற்போது நிர்வாகிகள் சந்திப்பு பயணம் என்று விஜய் மாற்றி உள்ளார் என்பதை எப்படி பார்க்கிறீர்கள்? என கேட்கிறீர்கள்.

தம்பியை குறை சொல்வது என் வேலையில்லை. என்னுடைய வேலையை நான் செய்து கொண்டிருக்கிறேன். அதை நீங்கள் என் தம்பியிடம் தான் கேட்க வேண்டும். இந்தியா கூட்டணி வலிமையாக இருப்பதற்கு முக்கிய காரணம் ஸ்டாலின்தான். அவர் இல்லை என்றால் இந்தியா கூட்டணி இல்லை. அவர் கொடுத்தது தான் காங்கிரஸ் 10 தொகுதி. அவர் விலகிவிட்டால் இந்தியா கூட்டணி கிடையாது. அதனால் தான் மூத்த காங்கிரஸ் தலைவர்கள் ஸ்டாலினை ஆதரித்து வருகிறார்கள் என்றார்.

## "திமுக கூட்டணி கட்சித் தலைவரின் மனைவியே காவல்துறை தாக்குதலுக்கு ஆளாகும் நிலை...!" - இபிஎஸ் கண்டனம்



சென்னை: "திமுக கூட்டணி கட்சித் தலைவரின் மனைவியே காவல்துறை தாக்குதலுக்கு ஆளாகும் நிலைதான் இன்று நீடிக்கிறது" என உதவித்தொகை உயர்வு கோரி மாற்றுத் திறனாளிகள் நடத்திய போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் மீது நடத்தப்பட்ட தாக்குதலை சுட்டிக்காட்டி கண்டித்துள்ளார் அதிமுக பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி.

இது குறித்து அவர் தனது எக்ஸ் தளத்தில், "உதவித்தொகை உயர்வு கோரி மாற்றுத் திறனாளிகள் தொடர்ந்து போராடி வரும் நிலையில், நள்ளிரவில் கைது நடவடிக்கை என்ற பெயரில் திமுக அரசின் காவல்துறை மாற்றுதிறனாளிகள் என்றும் பாராமல், சென்னை முழுவதும் அலைகழித்து , வன்முறைத் தாக்குதல் நடத்தி அவர்களை கைது செய்ததாக வரும் செய்தி மிகுந்த அதிர்ச்சி அளிக்கிறது.

காவல்துறையின் ஈவு இரக்கமற்ற தாக்குதலில் மாற்றுத் திறனாளிகள் சங்கத் தலைவரும், திமுக கூட்டணி கட்சியான சிபிஐஎம் மூத்த தலைவர் தோழர் கே. பாலகிருஷ்ணன் மனைவியுமான பா. ஜான்சிராணி படுகாயமைடைந்து மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருப்பதாக செய்திகள் வருகின்றன.

திமுக கூட்டணி கட்சித் தலைவரின் மனைவியே காவல்துறை தாக்குதலுக்கு ஆளாகும் நிலைதான் இன்று , முதல்வர் ஸ்டாலின் அரசு அனைத்து விதமான 'கோரிக்கைக் குரல்களை' ஒடுக்கப் நினைப்பதுதான் திமுக-வினுடைய பாசிஸ மனோபாவத்துக்கான சான்று.

ஜனநாயக விரோத, பாசிஸப் போக்கைக் கொள்கையாகக் கொண்டு, மாற்றுத் திறனாளிகள் மீது கருணையின்றி நள்ளிரவு முழுவதும் அலைகழித்து , அடிப்படை உரிமைகளை கூட மறுத்து , தாக்குதல் நடத்தியுள்ள திமுக அரசுக்கு எனது கடும் கண்டனம்.

மாற்றுத் திறனாளிகள் மீதான அடக்குமுறை நடவடிக்கைகளை முழுமையாகக் கைவிட வேண்டுமென ஸ்டாலின் மாடல் திமுக அரசை வலியுறுத்துகிறேன்." இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

Published by R.S ROSHINE Printed by **R.S. ROSHINE** On behalf of R.S. ROSHINE Printed at J.M. Process, No 29, V.N. Doss Road, BorderThottam, Mount Road, Chennai – 600002.
and Published From NO. 42/62, Buchammal Street, 1st Floor, New Washermenpet, Tondiarpet, Chennai, Tamilnadu – 600081. Editor: **R.S.ROSHINE, PH: 8122836299, e-mail: paperboynewspaper@gmail.com**